# உதயதாரகை.—MORNING STAR.

*Published on the 2d and 4th Thursday of every Month at one shilling a Quarter payable in advance.*

ஞ. புத். சஞ். யிசூ.] ௲௮௱௪௪ ஹு. ஆவணி மீ. ௨௨. தேதி வியாழக்கிழமை, Thursday, August 22, 1844. [Vol. IV. No. 16.

## நித்தியாநித்திய வித்தியாசம்.

### உம். வித்தியாசம்.

#### நரகவேதனை.

துர்க்கந்த கஷ்டமான நரகபாதாள அக்கினிச் சமுத்திரத்திலே விழுந்தவர்கள் தங்கள் தங்கள் கையாற் செய்த பாவம் கண்ணாற் கண்டபாதகம் அங்கத்தாற் சுகித்த பாவம் காலால் நடந்த அக்கிரமம் வாக்கால்வருத்த பொய் காதாற் கேட்ட கோள் மூக்கால் பாவத்துக்குதவியாயேற்றின வாசம் நெஞ்சால் விரும்பின வஞ்சகம் மனதாலுசாவின காமலீலை கருத்தாற் பற்றின துரோகம் புத்தியாற் றேர்ந்தறிந்து செய்யத் துணிந்த தீமை என்னும் இவைகளுக்குத் தக்கதாக நரகத்திலே ஆக்கினை அநுபவிப்பார்கள். இதோ திரளிடி முழக்கத்தினாலே நரகத்திலே விழுந்தவர்களுடைய இரு காதுகளும் வெடித்து அதின் வழியாகக் கொடுமையோடு குங்கிலியமும் கெந்தகமுமுருகி யாறாய்த் திரண்டுருண்டோடிச் சுழன்று அவர்களுடைய காதுகளிலே பாய்கிறது காதாற் செய்த குற்றத்துக்குச் சம்பாவனையேதென்றறி. வாயிலே நின்று புரணி பொய்யாணை புறப்படச் சாதனைபண்ணினதற்கு இப்பொழுது அணையாத அக்கினி நரகத்திலே அவர்கள் வெந்துகொண்டிருக்கிறதைக் கண்டு பல்லுகளை நெறுநெறெனக் கடித்து நாக்கு வெடித்து உதடுலர்ந்து வயிறுடைந்து வாய் வழியாக நுரைநுரையாய்ச் சோரி வடிந்து கோகோவென்றலறி வேவார்கள் சரீரத்திலே அநுபவித்த காம சுகத்துக்கு இப்பொழுது விழுந்த நரகத்திலே அசையாத கட்டைகளைப் போல அவர்களுடைய சருவாங்கமெல்லாம் தீப் பற்றி எரிந்து வெடித்துப் பெரும் புண்ணாகிச் சேறுஞ்சலமுமுருகிப் பிணங்களாய் நாறி உடம்பினரம்புதோல் எலும்பு குடல்வயிறாதிநசுங்கி நாறி அழிந்து தியங்கிசுருங்கி வலித்துக் காலயர்ந்து கை விழுந்து நெஞ்சு சுருங்கி மண்டை வெடித்து வேவார்கள். மாறாத இந்த வேதனையால் என்றென்றைக்கும் அழியாமல் நாறி வேகாமல் வெந்து சாகாமற் செத்துப் பாடுபடுவார்கள். கண்ணாற் காணாததைக் காணவேண்டுமென்று கண்டு பல பாவஞ் சுகித்ததற்கல்லோ அவர்களுடைய இரு விழியிலும் அக்கினி ஆறிடைவிடாமற் பாய்ந்தோடி யுருவிப் புறப்பட்டுக் கண் குருடர்களாய்ப் போனாலும் பசாசுக்கிரையாக நரக பாதகர்கள் வேகிறதையும் உருண்டு சுழன்று விழுந்து சொந்தளிக்கிறதையும் துடித்து நடுங்கிப் புரளுகிறதையும் கண்டு தியங்கி ஏங்கிப் பதறி அழுவார்கள் கண்ணீர் நீராவியாய்ப் பெருகும்படி எவ்வளவழுதாலும அவர்களுடைய கண்ணீர் வற்றாமல் எப்பொழுதும் விழுமென்றறி. பாதகா! இந்தக் கொடுமைகளெல்லாம் கொஞ்சமென்றே பிரதிதினங் கண்ணால வருகிற பாவத்தைத் தவிராமலிருக்கிறாய். நாசியிலே பாவத்துக்கேதுவான வாசமேற்றினதற்கு இப்போது இடைவிடாமற் கஷ்டமான நரகக் குழியிலே துர்க்கந்தப் பிணநாற்றத்தைப் பெற்று நாசி வெடித்து அதின் வழியாகப் புகைமண்டி இருண்டேறி நெளிந்து நெருக்கமுண்டாய்ச் சீறியலறுகிற நரகத்திலே விழுந்தவர்களைக் கண்டாயோ? பாதகா! சொற்பசுகத்துக்கு இந்த நிட்டூரமான நிர்ப்பந்தத்தை அநுபவிக்கவேண்டுமென்றிருக்கிறாய். விலக்கப்பட்டதை மனசிலே இச்சித்ததற்கே யென்றும் அவியாத நரகத்திலே மன வெறுப்போடே தம்மைத் தாமேவெறுத்துக் கண்டிதத்தோடே மனம் வெந்து நொந்து மயங்கித் தியங்கி மேல்மூச்சைக் காணாமற் கதறி அவநம்பிக்கையோடே நாக்கைக் கடித்து நெஞ்சிடித்து மனமெரிந்து நொந்து பசியாறவும் தாகந் தீரவும் ஒரு பிடி தவிடு கிடையாமலும் ஒரு துளி தண்ணீர் காணாமலும் கோபித்து வாய்பிளந்து நாக்கைப் படுங்கி வயிறு எலும்போடொட்டிப் பசிக்கிறோம் தவிக்கிறோம் பசியாற ஒன்றுங் காணோம் தாகந்தீரத் தண்ணீர் காணோம். இளைப்பாறத் தஞ்சமறியோம. பாவிகளோ நாங்களென்று சொல்லி என்றைக்கும் மாண்டிறந்து வேதனைப்படுவார்கள். ஆ, பாவீ! உன் சருவாங்கமெல்லாம் கரைகாணாத அக்கினி நரகத்தில் எப்பொழுதும் வேகாத கட்டையாய் வெந்து நாறியிருக்கிறது கொஞ்சமென்றோ காமசுகத்தை வெறுத்துச் சரீரத்தை அடக்காதே போகிறாய். நாசியிலே நரகத்தின் துர்க்கந்தமெல்லாம் ஏறுகிறது உனக்குக் கொஞ்சமென்றோ பரிமளவாசனையேற்றுகிறாய். மண்டை பிளந்து செவியடைத்துக் கண்கெட்டுக் கை காலயர்ந்து விழுந்து இடைவிடாமற் கஷ்டமான நரகத்தில் என்றென்றைக்கும் புரளுகிறது கொஞ்சமென்றோ ஞாயிற்றுக்கிழமை பூசைகாணாமலும் கட்டளையிட்ட ஒருசந்திபிடியாமலும் வருஷத்துக்கொருவிசையாகிலும் பாவசங்கீர்த்தனம்பண்ணாமலுமிருக்கிறாய. எப்பொழுதும் துன்மனப் பசாசுக்களுடைய கைகளினால் அடிபடுகிறது கொஞ்சமென்றோ பசாசுடைய மந்திர தந்திரம் பில்லிசூனியம் படிக்க நம்பியிருக்கிறாய்? ஓயாது நரகத்திலே அசையாத கட்டைபோலே வேகிறது கொஞ்சமென்றோ தாய் தகப்பனை நிந்தித்தடித்துக் கோட்சொல்லியாகிலுங் கேட்டாகிலும் இத்தொகைச் சாவான பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறாய். கண்டித அருவருப்போடே தன்னைத்தான் வெறுத்து வேகிறது கொஞ்சமென்றோ ஒருவன் செய்த குற்றத்தைப் பொறாமல் சாகுமளவும் மனசிலே கண்டிதமாய் வைக்கிறாய். நரகத்திலே சாகாத சாவு சாகிறது திரணமென்றோ கொலைபாதகத்தை நிறைவேற்றவேணுமென்றிருக்கிறாய்? தீராத தாகமும் மாறாத பசியும் அநுபவிக்கிறது சதமென்றோ புறத்தியாருடைய உடைமையைத் திருடுகிறாய்? என்றைக்கும் நிந்தை அவமானத்தோடே அடிபடுகிறது விழலென்றோ மற்றவர்களைச் சிநேகியாமல் நிந்தித்து உபத்திரமபண்ணி நிஷ்டூரனாய் நடக்கிறாய்? சரீரமெல்லாம் புழுவாய்ப் புழுத்து நாறுகிறது திரணமென்றோ ஸ்திரி போகத்தைச் சுகித்து நடக்கிறாய் இப்படி நடந்தால் நரகத்தை விட்டுப் புறப்படாமல் எப்பொழுதும் வேவாய். ஒருத்தன் சற்று நேரத்துக்கு மாத்திரம் பசாசைக் கண்டதினாலே புத்தி மயங்கிச் சோர்ந்து விழுந்து சொல்லுகிறான்—உலக முடியுமட்டும் தீ எரிகிற சூளையில் என்னைப் போட்டுவிட்டாலுஞ் சகிப்பேன். நான் கண்ட பசாசைத் திரும்பக் கண்டேனேயானால் ஒருக்காலுஞ் சகிக்கக்கூடாதென்றான். ஒரு பசாசைக் கண்டதற்கு இத்தனை பயங்கரம் உண்டாச்சுதென்றால் எண்ணிக்கையிலடங்காத பசாசுகளை இடைவிடாமற் பார்க்கிறதுமன்றி அவைகளாலே அடிபடுகிறது எத்தனை என்று கண்டுகொள்வாய். ஓரிடிமுழக்கங் கேட்டதற்கு அநேகம்பேர்கள் செத்துவிழுந்து போனார்களே. திரளிடி முழக்கம் இடைவிடாமல் துர்க்கந்த நரகத்திலே குமுறுகிறதையும் இடிமேலிடி விழுந்து முழங்குகிற கடினமான சத்தத்தையும் எண்ணிறந்த பசாசுகள் அலறுகிற சத்தத்தையும் எண்ணப்படாத நரக பாதகர்கள் அபயமிட்டழுகிற கடினமான சத்தத்தையும் எப்படிப் பொறுப்பாய். பாவீ இந்த உலகத்திலே இடி வெடி மற்றுண்டாகிய சத்தங்களெல்லாம் ஒன்றாய்த் திரண்டு கூடினாலும் துர்க்கந்த நரகத்திலே கேட்கப்படுகிற சத்தத்துக்கிணையாகவைத்தால் ஒருபட்சியினுடைய குரலுக்குத்தானே காணுமென்று ஒருமகாத்துமாவானவர் சொன்னதைக் கேட்டிருக்கிறாய. ஐயோ இந்தக் கொடுமையான ஆக்கினை எப்படிப் பொறுப்பேனென்று சொல்லி அஞ்சுகிறாயோ? இந்த உலோகத்திலே ஒரு பசாசு வந்து தோன்றினவிடத்தில் ஒரு பாவியினுடைய கையிலே நரகத்திலேயுள்ள அக்கினிப்பொறி சற்றே விழுந்தவுடனே கையிரண்டாய்ப் பிளந்து ஊடுருவினாற்போலே கைவெடித்து வெந்து உடலேறக் கரைகாணாத அக்கினி நரகத்தில் என்றென்றைக்கும் வேகிறதெத்தனை வாதையென்று வர்ணிப்பாருண்டோ? ஆ! பாவி. நேரத்தோடே புத்தியைத் தேர்ந்துபார். நரகத்திலே விழுந்தவர்கள் வேணுமென்றிங்கே விழுந்துவிட்டோமென்கிற புத்தியினறிக்கையாலவர்களுடைய மனசில் எப்பொழுது முசாவுகிறதாவது, நரக ஆக்கினை முடியாதென்றும் மீட்சியில்லாமல் நரக வாதைப்படுவோமென்றும வவியநரகத்திலே விழுந்துவிட்டோமென்றும் ஆலோசிக்கிறபுத்தியின் யோசனையல்லாதே படித்தசாத்திரத்தையும் கற்ற நூல்களுடைய நளினத்தையும் மறந்துபோவார்கள். முன் உலகத்திலே செல்வராயிருந்தோம் புவுஷப்பெற்றவராயிருந்தோம். அநேக சுகசெல்வங்களை அநுபவித்தோம். இப்பொழுது அவை

களிலொன்றுங் காணேம். வியர்த்தமாய் நரகத்திலே வேகிறோம். நீசர்களாய்ப் பசாசுக்களாலே அடிபடுகிறோம். புத்தியில்லாத மூழ மடையர்களானோம் என்றது மாத்திரமறிந்து நினைத்து முகங் குருவி நரகத்திலெரிவார்கள். பாதகா! இப்படிப் பாடுபடுகிறது உனக்கு நல்லதோ? மோட்சத்திலே வீற்றிருக்கிறது உனக்கு நல்லதோ? இப்படி வேகிறது உனக்குக் குணமோ? பரகதியானந்தத்திலே களிகூருகிறது உனக்கு வாகியோ? இப்படி நிந்தைப்பட உனக்குச் சித்தமோ? மோட்சானந்த ராசாங்க பத்திராசனத்தின் மீதே வாழ்ந்திருக்கிறது உனக்கு நல்லதோ? இரண்டிலொன்றை நேரத்தோடே உனக்கு வேண்டியபடி தேர்ந்து பார்த்தாயானால் பரமபதமடைய வழி அறிந்திருந்து அதன்படியே மரண பரியந்த நடக்கக் கடவாயென்றறி. பாவ வழியிலே நடந்தாயானால் தப்பாத நரகமே உனக்குக் கதியென்றறி.

இரண்டாம் வித்தியாசம் முற்றுப்பெற்றது.

---

## தென்சமுத்திரத்தீவில் நடந்த சங்கதி:

### Missionary Enterprises in the South seas.

(Continued from page 143.)

அதற்கவன் நான் அந்தி சந்தியிலுஞ் சமுசாரச் செபம் வைத்துவருகிறதுமன்றி ஒரு நாளிலே மூன்று முறை தனித்துஞ் செபம்பண்ணியும் வருகிறேனென்றான். பின்னும் நான் அவனைச் செபத்தில் என்ன சொல்லிச் செபம்பண்ணி வருகிறாய் என்று கேட்க, அவன் நான் பெரிய பாவியாயிருக்கிறேன். என்னுடைய பாவத்தை உம்முடைய இரத்தத்தினாலே நிவிர்த்தி செய்யும், நீதியைக் கட்டளையிடும், எனக்குக் கிறிஸ்துவின் ஆவியைத் தாரும். நான் உம்மைப் போலக் குணத்திலும், நடையிலும் நடக்கக் கிருபை பண்ணும். நான் சாகும்பொழுது என்னை மோட்சத்திற் சேர்த்துக்கொள்ளுமென்று இவ்விதமாகச் செபம்பண்ணி வருகிறேனென்று சொன்னான். நீ இது காரியங்களை எப்படி அறியவந்ததென—உங்களைத் தொட்டுத்தானென்றான். அதற்கு நீ ஒரு கூட்டங்களுக்கும் வர நான் காணவில்லை. குறிச்சிகளிற் பண்ணின பிரசங்கங்களைக் கேட்கவும் வரவில்லை. இவைகளை எப்படி அறிந்தாயென்றேன்—அவன் இந்தச் சனங்கள் பிரசங்கத்துக்கிருந்துவீட்டுக்குப் போகும் வழியிலே என்னுடைய மேடையில் நான் இருக்கையில், இவர்களிடத்தில் நீங்கள் கேட்டுக்கொண்டுபோகிற காரியங்களில் எனக்குச் சொல்லிப் போங்களென்பேன்—அவர்கள் ஒவ்வொருவருங் கொஞ்சங் கொஞ்சஞ் சொல்ல நான் அவைகளைப் பொழிப்பாகக் கேட்டு மனதில் வைத்து வருவேன். இந்தப் பிரகாரமாக நான் கிறிஸ்து மார்க்கத்தைக் குறித்து அறிந்து கிறிஸ்துநாதரை வழிபட்டு வந்தேனென்றான்.

இந்தத் தீவிலே நாங்கள் வரக் கொஞ்ச நாளைக்கு முன் அவ்விடத்திலுள்ள (பா) (காணிகை) (மாகி) (தின்னேமன்) என்ற பிரதானிகளுக்கும் அவர்கள் சனங்களுக்குமுண்டான யுத்தத்திலே (தின்னேமனும்) சனங்களும் வெட்டுண்டு விழ (மாகியாவும்) சனங்களுந் தங்கள் ஆதனங்களையும் விட்டோடிவிட்டார்கள். ஒருமுறை நான் இந்தத் தீவிலுள்ள குறிச்சிகளுக்கூடாக இராசாவுடனே கூடிக்கொண்டுபோகையில் தென்னம் வேர் மிகுதியாய்க் காலிலே இடறுகிறதைக் கண்டு இது ஏதினாலே, பார்த்தவிடமெல்லாந் தென்னம் வேர் இருக்கிறதென்று விசாரித்தேன். அதற்கு அவர் மறுமொழியாக இந்த ஊரிலே யுத்தமுண்டானாற் சனங்கள் ஒருவரை ஒருவர் கொலைசெய்கிறதுமன்றி உள்ள மரந்தடியையுஞ் சேதப்படுத்துவார்களென்றார். சனங்கள் இந்தத் தென்னமரங்களையென்ன ஆயுதத்தினாலே தறிக்கிறார்களென்று கேட்டதற்கு அவர் சொன்ன விதம் என மனதுக்கு மெத்த நூதனமாயிருக்கின்றது. எப்படியெனில், சத்துருக்களெல்லாருமாய்க் கூடிக் கடலுக்குப் போய் ஒரு வகையான நத்தைகளைப் பிடித்து வந்து அவைகளை ஒருகுட்டானிலே போட்டுக்கொண்டு மரத்திலேறித்தலைக் குருத்தைக் கிழித்து அந் நத்தைகளை அதற்குள்ளே விடுவார்கள். அவைகள் அதற்குட்பட்டுக் குருத்தைத் தின்னும். இந்தப் பிரகாரமாய் மரமெல்லாம் வட்டுப் புரண்டு மொட்டையாய்ச் சிதைந்து போம். இந்த விதஞ் செய்யாவிட்டாற் கல்லினாற் குருத்தைக் குத்தி வாட விட்டு இந்தப் பிரகாரமாய் மரத்தைச் சேதப்படுத்துவார்கள்.

இவர்களுக்குள்ளே இரத்தஞ் சிந்துதற்கான பழக்கங்களைக் கேட்டாற் சரீரமானது பயத்தினாலே விறைத்துப்போகவேண்டியதாயிருக்கும். நாங்கள் இந்தத் தீவுக்கு வரக் கொஞ்ச நாளைக்குமுன்னமே அனேகமாயிரஞ் சனங்கள் யுத்தத்திலே மடிந்து போனார்கள். சிறையாகப் பிடிக்கப்படும் பெண் சனங்களை உயிரோடிருக்கவிட்டால் இன்னம் படைத் தொழிற்காரரைப் பெற்று வளர்ப்பார்களென்றஞ்சி அவர்களைக் கொன்றுபோடுகிற வரடிக்கையிருந்தது. யுத்தத்தில் அகப்பட்ட பிள்ளைகளையோவென்றால், அவர்கள் கதுப்பை ஊடுருவ இட்டியினாலே குத்தி எடுத்துக்கொண்டுபோய்ப் பலியாக விக்கிரகங்களுக்கு முன்னே வைப்பார்கள். சில பிள்ளைகளுடைய தலையைப் பிளந்து அமுதத்தை எடுத்துச் சுவாமிக்கு அவிப்பாகமாக இலைகளிலே படைத்து வைப்பார்கள். வேறு சிலர் ஒரு குற்றியைக் கட்டியிழுக்குமாப்போலே அச் சவத்தைக் காலிலே கயிறுபோட்டுக்கட்டித் தெருநீளம் ஆடிப்பாடி இழுத்துக்கொண்டுபோய்த் தாங்கள் அடைந்த வெற்றியினிமித்தம் விக்கிரகங்களுக்குப் பலியாய்ச் செலுத்துவார்கள்

(தொடர்ச்சி)

---

## உபநிடதம்.

[The theological and argumentative portion of the Vedas.]

சிவபத்திக்காரரும் விஷ்ணுபத்திக்காரர்களுமாகிய சகல பிராமணர்களுக்குள்ளேயிருக்கிற மேன்மை பொருந்திய உபநிடதங்களில் ஒன்றைச் சமஸ்கிருதத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. இதிலே தங்களைப் பிராமணர்களென்று சொல்லி மற்றவர்களுக்குத் தாங்கள் மேலானவர்களென்று சுபாவீகமாயெண்ணுகிறவர்களுடைய மதிகேட்டைக் காட்டியது.

### இது வேதசாகைகளிலொன்றாகிய
### வச்சிரசூசியென்கிற உபநிடதம்.

இது ஞானமில்லாதவர்களுக்குத் தூஷணமாயும் அதையுடையவர்களுக்குப் பூஷணமாயும் அஞ்ஞானத்தைப் போக்குவதாயுமிருக்கின்றது. இதை மாணாக்கனே, உனக்கு நாம் சொல்லுகிறோம். பத்தியுடனே கேட்பாயாக.

பிராமணவர்ன முதலிய நான்கு வர்னங்களிலும் பிராமணனே சிரேஷ்டனென்று வேதங்களுந் தரும சாஸ்திரமுதலியனவும் அதற்குத் தகுதியாகச் சொல்லுகின்றனவென்று இதுசொல்லுகின்றது. ஆனாற் பிராமணனென்கிறவன் யார்? சீவனா—தேகமா—சாதியா—ஞானமா—தருமமா—கருமமா என்று மாணாக்கன் கேள்வி. அதற்கு,

ஆசாரியன், முன்வந்தனவும் மேல்வருவனவுமாகிய அநேகதேகங்களிலுஞ் சீவனொருவனாகவேயிருக்கிறதினாலேயுங் கர்மவசத்தினாலே ஒரே சீவனுக்கு அனேகவிதமான தேகங்கள் சம்பவிக்கிறதினாலேயும் அநேக சீவன்களுக்கும் ஒரேரூபமானதினாலேயும் பிராமணன் சீவனல்லவென்று உத்தரம்.

மாணாக்கன், ஆனால் தேகம் பிராமணனோவென்று கேள்வி. அதற்கு ஆசாரியன், பிராமணன் முதலாகச் சண்டாளபரியந்தரமுள்ள தேகங்கள் பஞ்சபூதங்களுடனே கூடினதினாலும் ஒரேரூபமாயிருக்கிறதினாலும் நரை திரை மூப்பு மரணங்கள் சமமாயிருப்பதினாலும் பிராமணனுக்கு ஆயுள் நூறுஞ் சத்திரியனுக்கு ஐம்பதும் வைசியனுக்கு அதிற்பாதியும் அதிற்பாதி சூத்திரனுக்குமென்கிற நியமமில்லாததினாலேயும் பிராமணன் சுவேத வர்னமாயிருக்கிறானென்றுஞ் சத்திரியன் மஞ்சள் வர்னமாயிருக்கிறானென்றும் வைசியன் இரத்தவர்னமாயிருக்கிறானென்றுஞ் சூத்திரன் நீலவர்னமாயிருக்கிறானென்றுநியமமில்லாததினாலேயும்பிதாவானவன் இறந்தால்அந்தத் தேகத்தைப்புத்திரனானவன் தகனம்பண்ணும்பொழுது அந்தப்புத்திரனுக்குப் பிரமகத்திதோஷம் வருகிறதினாலுந் தேகத்தைப் பிராமணனென்று சொல்லக்கூடாதென்று உத்தரம்.

ஆனாற் சாதி பிராமணனோவென்று மாணாக்கன் கேள்வி. அதற்கு,

ஆசாரியன், இதரசாதிகளிலேயு மிருகசெந்துக்களிலேயும் அநேகரிஷிகள் பிறந்திருக்கிறார்கள். அதெப்படியெனில், ரிஷிசிருங்கர் மிருகத்தினிடத்திலேயுங் கவுசிகர் தர்ப்பையிலேயுஞ் சாம்புகர் சம்புகத்திலேயும் வான்மீகர் புற்றிலேயும் வியாசர் கைவர்த்த கன்னிகையிடத்திலுங் கவுதமர் முயற்புட்டத்திலேயும் வசிட்டர் ஊர்வசியினிடத்திலும் அகத்தியர் கும்பத்தினிடத்திலும் பிறந்திருக்கிறதினாலும் பிராமணனானவன் கடவுளுடைய முகத்திலேயுஞ் சத்திரியன் புயத்திலேயும் வைசியன் தொடையிலேயுஞ் சூத்திரன் பாதத்திலேயும் பிறந்தானென்று வேதத்திலே சொல்லியிருக்கின்ற பிரகாரமாக இப்பொழுது பிராமணன்முகத்திலே பிறவாததினாலுஞ் சாதியைப்பிராமணனென்றுசொல்லக்கூடாதென்று உத்தரம்.

ஆனால்ஞானம்பிராமணனோவென்று மாணாக்கன்கேள்வி. அதற்கு

ஆசாரியன், சத்திரியன் முதலானவர்களும் பரமார்த்த ஞானத்தை அறிந்தவர்களாய் இருக்கிறதினாலே கூடாதென்று உத்தரம்.

ஆனால் தர்மம் பிராமணனோ என்று மாணாக்கன் கேள்வி. அதற்கு,

ஆசாரியன், சத்திரியன் முதலானவர்களுந் தானதர்மம் பரோபகாரங்கள் செய்கிறவர்களாயிருப்பதினாலே கூடாதென்று உத்தரம்.

ஆனாற் கர்மம் பிராமணனோ என்று மாணாக்கன் கேள்வி. அதற்கு,

ஆசாரியன், பிராரத்தம் சஞ்சிதம் ஆகாமியம் என்று மூன்றுவிதமாயிருக்கின்ற கருமங்கள் எல்லாருக்குஞ் சமமாயிருப்பதினாலும் அவர்களுக்கேற்ற மற்றக் கருமங்களை இந்த நால்வகையோருஞ் செய்வதினாலுங் கூடாதென்று உத்தரம்.

ஆனாற் பிராமணனாரென்று மாணாக்கன் கேள்வி. அதற்கு,

ஆசாரியன், ஒப்பற்றதாயுங் குணந்தொழிலென்பன வில்லாததாயும் அறுவகை யூர்மிகளும் அறுவகைத் தோற்றங்களுமுதலாகிய தோஷங்களில்லாததாயுஞ் சத்துஞ் சித்தும் ஆநந்தமுமென்கின்ற மூவகை வடிவுடையதாயும் இயல்பாகவே யாதொரு வேறுபாடுமில்லாததாயும் மிகுந்த கற்பனைவடிவாயும் எல்லாப் பூதங்களுக்குள்ளுமிருக்கின்றதாயும் எல்லா உலகங்களிலும் உள்ளும் புறமும் நிறைந்திருப்பதாயும் இடையறுத வடிவையுடையதாயும் அளவில்லாததாயும் பிரமஞானமுடையோர்கள் தங்கள் அனுபவத்தினாலேதானே அறியப்படுவதாக. தனக்குத்தானே பிரகாசித்துக்கொண்டிருப்பதாயும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல வெளிப்படையாய்க் காணப்படுவதாயுங் காமக்குரோத லோபமோக மதமாச்சரியாதி தோஷங்களுமில்லாததாயும் இருக்கின்ற பிரமத்தை அறிந்தவனும் இடம்பம் அகங்காரமுதலிய துற்குணங்களாலே தீண்டவுங்கூடாத பரிசுத்தமனதையுடையவனும் இருக்கின்றவன் எவனோ அவனே பிராமணனென்று உத்தரம்.

ஆனால் இது எல்லாச் சாஸ்திரங்களுக்கும் ஒத்திருக்குமோவென்று மாணாக்கன் கேள்வி. அதற்கு,

ஆசாரியன், இந்தப்பிரகாரமே சுருதிமிருதி இதிகாசங்களுடைய அபிப்பிராயங்களுமென்று உத்தரம்.

ஆனாற் பிராமணனென்கின்ற சொல்லுக்கு இதுதானோ அருத்தமென்று மாணாக்கன் கேள்வி அதற்கு,

ஆசாரியன், பிராமணனென்கின்ற சொல்லுக்கு அருத்தமிப்படிப்பண்ணவிட்டாற் பிராமணத்துவசித்திவரவே மாட்டாதென்று உத்தரம. இது இப்படியிருக்க,

பலவித சாதியிற் பிறந்த மெய்ப் பிராமணர்களாகிய ரிஷிகளுடைய தேகான்மாக்களும் அவர்களைத் தவிர ஞானத்தைப் பெற்றுத் தருமத்தைச் செய்து தேவ சடங்குகளையும நிறைவேற்றினவர்களாகிய அனேகம் பேர்களுடைய ஆன்மாக்களுந் தேகங்களுமொன்றென்றே இதில் விளங்குகின்றது. பிறருஞ் சாதியெல்லாமொன்றே பேதமில்லையென்று சொன்னார்கள். உ—ம்.

சாதியாவதேதடா சலந்திரண்ட நீரல் லோ
பூதமைந்துமொன்றல்லோ புலன்களைந்துமொன்றல் லோ
காதுவாளி காறை கமபி சூடகம் பொன்னொன்றல் லோ
சாதிபேதமோதுகின்ற தன்மையென்ன தன்மை யே.

ஆனால் அப்பொழுது பிராமணன், சீவனா—தேகமா—சாதியா—ஞானமா—தருமமா—கருமமாவென்று கேட்கில் இவையெல்லாம் பிராமணனல்ல.

பரப்பிரமத்தை வணங்குகிறவர்கள் தாழ்மையும்பரிசுத்தமுமான மெய்ப் பிராமணாகளென்று இந்த உபநிடதத்திற் சொல்லியிருக்கின்றது. அதுசரி, ஆனால் அப்படிக்கொத்தவர்கள் எங்கே காணப்படுவார்களென்னில, அவர்கள் எல்லாரும் மற்றத் தேவர்களையும் விக்கிரகங்களையும் வணங்குகிறவர்களலல. விக்கிரகக்கோவில்களிலே தங்கள் சுப பலனுக்காகச் சடங்குகளைச் செய்கிறவர்களல்ல. அவர்கள் அகங்காரமுள்ளவர்களும் அசுத்தருமல்ல. அதினால் இப்படிச் செய்கின்ற அகங்காரிகளும் அசுத்தருமாகிய இவர்களெல்லாருந் தங்கள்பிரமாணப்படியே மெய்ப்பிராமணர்களல்ல.

பிரமாதிகளைக் குறித்து இவ்விடத்திற் சொல்லப்பட்டவைகளெவையெனில், விக்கிரகத்திற்கும் பிரமாதிகளுக்கும் வெகு வித்தியாசங்கள் எண்ணப்பட்டபொழுதிலும் நித்தியமுஞ், சாவவலலமையுஞ் சர்வ ஞானமுஞ் சர்வ வியாபகமும மாறுமையும் உண்மை நீதி இரக்கம் பரிசுத்தமுமாய் நித்திய ஆவியான மெய்யான கடவுளுக்கொப்பானவர்களல்ல. பிரமாதிகளோ சகல பஞ்ச பூதியங்களுக்கும் ஒப்பிடப்பட்டவராகச் சொல்லப்படுகிறது. மெய்யான கடவுளோ அவைகளிலொன்றுக்கும் இசையப்படாதவராய் இருக்கிறார். அவர் துஷ்டரைச் சிட்சித்து இஷ்டரை இரட்சிக்கிறவராகச் சொல்லியிருக்கின்றது. பிரமாதிகள் செய்கிரியைகளையுடைத்தானவர்களல்லர் மெய்க் கடவுளே சகல காரியங்களையும் ஆண்டுநடப்பிக்கிறவராக விளங்கப்பட்டிருக்கின்றது.

அந்தப் பிரமத்துக்குப் பிறப்புமில்லை இறப்புமில்லையென்று தமிழர்கள் சொல்லுகிறார்கள். அது மெய்தான். ஆனால் விருப்பு வெறுப்பில்லையென்றுஞ் சொல்லுகிறார்கள். அது மெய்யல்ல. அவரைத்தொழுகிற பேருக்கெல்லாம் அசட்டையாக உன்னதத்தின் இளைப்பாறுதற்றலத்திவிருக்கிறவரல்ல. ஆனால் உலகமடங்கலும் பராமரித்துச் சகல வஸ்துக்களையுந் திருத்திபண்ணுகிறார். அவருடைய பராமரிப்புச் சர்வலோகமும் அடங்கியது. அவரிற் பிழைக்கிறோம். அசைவாடுகிறோம். நம்முடைய சீவனுமுடைத்தாயிருக்கிறோம். அவரை அறியாமல் ஒரு அடைக்கலான் குருவியும் பூமியில் விழுகிறதில்லை. அவருடைய கடாட்சத்தினாலேதான் நம்முடைய சீவனிருக்கிறது அவருடைய நீடியசாந்தம் நம்முடைய பிராணனிலும் பெரிது.

இந்த உபநிடதத்திற் சீவன் அல்லது ஆன்மா அனேக சடலங்களெடுக்கிறதாகச் சொல்லப்படுகிறது. அது மெய்யல்ல, யாதொரு முற்பிறப்பை யாரும் ஞாபகப்படுத்தக்கூடாது. ஒருவன் தனக்கு ஞாபகமில்லாதிருக்கிற வேறொருசெனனத்திலே தான் செய்த யாதொரு குற்றத்திற்காக இப்பொழுது தண்டிப்பைஅல்லது பலனை அளிக்கிறது அவனறியாமையால் அது கடவுளுக்கு நீதியல்ல. ஒரு மனிதன் விழித்திருக்கும்பொழுது செய்த குற்றத்திற்காக நித்திரைபண்ணும்பொழுது தண்டிக்கிறதும், அவன் நித்திரைபண்ணுகையிற் செய்த குற்றத்திற்காக விழித்திருக்கும் பொழுது தண்டிக்கிறதும் நியாயமோ? தமிழர்களுக்குள்ளே ஞானவான்கள் வேறே யாதொருசனனமுமில்லையென்கிறதாகச் சொல்லியிருக்கிறார்கள். கறந்தபால் முலைபுகாவென்னுஞ் செய்யுளை நோக்கிக் காண்க.

நிசமான முற்பிறப்பு என்பது குணத்தின் மாறுதலினாலே கடவுளுடைய ஆவியினாற் பிறந்திருக்கின்றது. அப்பிறப்பாவது துற்குணம் நீங்கி நற்குணத்தைப் பெறுகின்றது. இரத்தத்தினாலும் மாமிச இச்சையினாலும் மனிதனுடைய சித்தத்தினாலுமல்ல, கடவுளினுடைய இச்சையினாலேயென்று கிறிஸ்து வேதவாக்கியத்திற் சொல்லியிருக்கிற பிரகாரம் (யோவான் க. அதி. ௰௩. வச.) முற்பிறப்பு இன்னதென்று சொலலியிருக்கின்றது.

பிராமணர்கள் தங்களை இருபிறப்பாளரென்று சொல்லுகிறார்கள். ஆனால் ஆவியினாற் பிறந்தவர்கள்மாத்திரம் இருபிறப்பாளர். அவர்கள் இரட்சகரும் ஆண்டவருமாகிய இயேசுக்கிறிஸ்துவில் விசுவாசத்தினாலே கடவுளின் புத்திரர்களும் மோட்சத்தின் சுதந்திரர்களுமாயிருக்கிறார்கள். இதைவாசிப்பவர்களெல்லாருந் தங்களுடைய பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு அவைகளை அருவருத்துத்தள்ளிக் காத்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்குத் தங்களை முழுவதும் ஒப்புக்கொடுத்து அவருடைய கிருபையாற் கடவுளினுடைய புத்திரரைப்போலத் தேவலட்சணத்திற்குப் பங்குள்ளவர்களாகிறதுமாத்திரமன்றி மோட்சத்தில் அவருடனே இராசாக்களும் ஆசாரியர்களுமாவார்கள்.

ஓ! இந்துதேசத்துப் பிராமண மகாசனங்களே, உங்களுடைய இந்த வச்சிர சூசியென்கின்ற உபநிடதத்திலே சொல்லியிருக்கிறபிரகாரமாக நீங்கள் பரிசுத்தமான மனதையுடையவர்களாகி இயல்பாகவே எலலாக்குற்றங்களும் நீங்கி யாதொரு விகற்பங்களுமில்லாமல் எல்லா உலகங்களிலும் மயிர்முனைக்கும் இடமின்றி உள்ளும்புறமுமாய் நிறைந்தேகாகாரமாயொப்பளவுயர்வுகளின்றி உள்ளங்கை நெல்லிக்கனிபோல வெளிப்படையாக அறிவுடையோர்கள் தங்கள் அனுபவிதத்தினாலேதானே அறியத்தக்கதாகத் தனக்குத்தானே பிரகாசித்துக்கொண்டிருக்கின்ற ஒன்றான கடவுளாகிய பராபரனை அறிந்து வழிபட்டு முத்தியையடைகிற நன்மார்க்கத்தைவிட்டு விருதாவிலே கானலைப்புனலென்றெண்ணியருந்தி விடாய்தீரச் சென்றலையுமான்போலக்கல்லையுஞ் செம்பையுங் கசுமாலலிங்கத்தையுங் கடவுளென்றெண்ணி வணங்கிப்பயனைக்கொள்ளாதுழல்வதை நீங்கள் யோசித்துப் பாராதிருப்பதுமன்றி உங்கள் சாதியை நீங்களே மேன்மையென்றெண்ணிக் கெறுவித்தழிதலையும் நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறது தர்மமல்ல. ஆதலாலிதைக்குறித்து நாங்கள் சொல்லுகிற நீதிநெறிவிளக்க நன்மதங்களை நீங்கள் விரும்பிக் கேட்பீர்களாக.

உதயதாரகை—MORNING STAR.

Jaffna, August 22nd, 1844.

## TO EDUCATED NATIVES.

With your best endeavours to act always on right principles, it will be strange, if, sometimes, you do not fall before the numerous and powerful temptations to do wrong, that beset you on every hand. This, considering the circumstances of your countrymen among whom you were reared, ought to be expected by your employers. It is of no use therefore for you when seeking employment, or when speaking of your qualifications for service, to go into a long palaver about your truth and honesty. This kind of pudding is only proved in the eating; and your beginning to talk in this way, as many of you are apt to do, will, with every sensible man, lead to the suspicion that your character is particularly defective in these very points. True worth is unostentatious. The factitious and vile are likely to boast of qualities they do not possess.

When you have done wrong do not attempt to conceal or extenuate your fault. By doing this you inflict a ten times greater injury upon your characters, than would be done by the commission of a fault that is frankly confessed. As it is with God so is it among men;—"he that covereth his sins shall not prosper, but he that confesseth and forsaketh them shall find mercy."

We repeat it; your employers, if reasonable men, will not be greatly surprised, if you sometimes do wrong; this alone will not turn their hearts against you. Their opinion of your hopeful usefulness in service will be formed from the disposition you exhibit when you have done wrong. If you make no effort at concealment, and manifest true sorrow—not that you have been detected, but that you have done wrong—and shew a humble but fixed determination to be more watchful in future, your fall may be the occasion of strengthening your moral characters and of gaining for you an increasing portion of their esteem and regard. Peter's fall humbled him; and after his repentance he was a wiser and better man than ever before. Many young educated natives, competent to fill the first places, after falling into evil habits, have made it their sole study to practice concealment, and as evidence of the truth gathered around them, have thought to falsify the facts by solemn denials upon oath, with abundance of crocodile tears; until, when the whole was clearly revealed, they have confessed it; who are now out of service or holding appointments far below their qualifications, in consequence of the injury they did themselves by this disgraceful and wicked course of concealment. Do not ruin your characters and prospects by such a course. Be firmly resolved always to do right, and when you find you have done wrong, acknowledge it, be sorry for it, and be more determined and watchful in future.

You should not forget your need of divine assistance to enable you to know and do what is right. Some men may think they can do well enough without divine aid. The characters of such men furnish no examples worthy of your imitation. Even if their views were correct (which they are not) it would avail nothing for you. Your moral principles even, if rightly formed are not well established. You are liable to be turned aside to evil on slight occasions, and stand in especial need of help and strength from on high. We are invited in the Scriptures to seek wisdom from above, and to put our trust in God for strength and deliverance. This duty might be urged upon you by a varity of considerations—as, your own dependence, ignorance, and weakness—the number and power of your adversaries—the superior knowledge and power of God—his readiness to strengthen and bless those who seek after him, &c. but it is hoped this hint at them will be enough.

The wisest and best men of all ages and countries have delighted to acknowledge their dependence on the divine Being for his assistance in prospering their undertakings; while those who have pretended to deny their dependence have most frequently met with disappointment, shame and contempt.

## ON THE INFLUENCE OF THE PRESS.

The man who conducts a widely extended periodical, presides at one of the chief fountains of public influence. He keeps himself in constant, though invisible, contact with thousands and thousands of minds. They may take little note of the effect which he produces upon them, and may even silently congratulate themselves that their opinions are their own; and yet he may be holding them spell-bound under his magic influence. While he determines the manner in which no small part of their time shall be spent, he imperceptibly helps to mould their taste, guide their judgment, fix their prejudices and give complexion to their character. Yonder is the respectable quarterly, devoted to the interests of science, of literature of philosophy and religion. It goes abroad to do a glorious work; and posterity will see that the name of the Editor has a place on the list of the world's benefactors. Yonder is a weekly sheet, designed as the vehicle of slander and falsehood, of pollution and impiety. The issues are like the opening of a cage of unclean birds. The vulgar herd together at the corners of the streets, to glut themselves over it. Its editor is a scourge to his generation.

The simplest view of a subject is often the most impressive. Estimate then the power of the press by the acknowledged influence of any great mind that has spoken through it. Do you see that man in the eccentricity of his genius prostrate upon the floor—laboring to recall one of the noblest efforts in the annals of intellect? It is Robert Hall, busy with his sermon on modern infidelity. His friends have asked him to publish it, and he will not decline; but as yet it has no existence except in his own mind; and though he loathes the labour of writing, he is turning his hand at intervals to the work. Wonder of the age as he was for modesty as well as for genius, he dreamed not of the influence which that sermon was destined to exert; but when it came forth, the whole world recognized it as the masterpiece of a master mind; it put itself into communion with the greatest intellects of the age: it threw around Christianity a new wall of fire; and infidelity, as she bent over its pages, resolved that silence was prudence. Turn now your eyes to yonder villa on the shores of the Mediteranian and see another mighty mind pouring out upon paper its brilliant thoughts to be given ere long into the printer's hands. It is Byron, the heaven-favoured, and yet foul-minded Byron,—in the act of producing one of his licentious poems. Peradventure he is dreaming of nothing but his own fame, but he is really opening a new fountain of death upon the world; he is making provision to perpetuate his existence as the enemy of his race; he is rendering the splendors of his genius subservient to the wild and desperate purpose of his heart. Both Hall and Byron are stars that must always shine, but in the beams of the one there is *life*—in the beams of the other there is *death*.—Dr. Sprague.

## ADVANTAGES OF A TASTE FOR READING.

If I were to pay for a taste which should stand me in stead under every variety of circumstances, and be a source of happiness and cheerfulness to me through life, and a shield against its ills, however things might go amiss and the world frown upon me, it would be a taste for reading. I speak of it of course only as a worldly advantage and not in the slightest degree as superseding or derogating from the higher office, and surer and stronger panoply of religious principles;—but as a taste, an instrument, and a mode of pleasurable gratification. Give a man this taste, and the means of gratifying it, and you can hardly fail of making him a happy man, unless indeed you put into his hands a most perverse selection of books. You place him in contact with the best society in every period of history,—with the wisest—the wittiest—with the bravest, and the purest characters who have adorned humanity. You make him a denizen of all nations—a contemporary of all ages. The world has been created for him. It is hardly possible, but his character should be of a higher and better tone from the constant habit of associating in thought with a class of thinkers, to say the least of it, above the average of humanity. It is morally impossible, but that the manners should imbibe a tinge of good breeding and civilization, from having constantly before one's eyes the way in which the best bred and the best informed men, have talked and conducted themselves in their intercourse with each other.

Sir J. Herschel.

*Education at the Cape of Good Hope.*—A correspondent of "the Madras Christian Instructor" writing from Cape Town, says: "A *third* observation which a stranger especially from Madras would not fail to make, is the liberality of Government towards education, as shewn not only by its direct efforts to establish and maintain schools under its own superintendance, but indirectly by the assistance it is ready to extend to the friends of education generally, and especially to the conductors of missionary institutions. I have before me a list furnished by Dr. Innes, the able superintendent of education under Government, of the sums granted annually to the different educational institutions in Cape Town, exclusive of what is given to other parts of the colony, showing an aggregate of £1252 6s. nearly the half of this sum is granted to missionary schools, viz: £70 to the Lutheran minister for the school under his care—£75 to the Scotch schools—£75 to the South Africa institutions—£75 to the Wesleyan schools. The missionary institutions in Cape Town alone receive aid from Government to the extent of £512 annually, this without being required to make the slightest compromise of their principles or peculiarities. These sums are granted by Government simply on the principle that the bodies receiving them are seeking the good of its subjects and are in a position to do this more effectually than Government itself could do. I may as well state here, that the annual expenditure of Government for education throughout the colony is something more than £6.500. The whole annual revenue of the colony is only £160,000; a sum, if I mistake not, considerably less than the pay of the Tanjore Collectorate alone; and yet this poor Government is expending more out of its poor income for the education of the people than is expended by the Madras Government out of the collected revenues of the whole Presidency. Were I to point out to you the number receiving education, or in other words the judgment and discretion with which this sum is managed, the contrast with Madras would become still more remarkable and still more disgraceful to our Eastern Rulers."

*Missionary.*—Mr. and Mrs. Spaulding who sailed for America via England in the Persia, from Colombo, arrived at London about the 26th June. The health of Mrs. Spaulding though considerably improved, was still precarious. They had taken passage for America and were to sail about the 7th July.—Mr. and Mrs. Hutchings arrived at New York the first of June. His health was not so good as when he was at sea.

*Arrivals.*—J. Crafer, Esq. the newly appointed Controller of Customs at Jaffna, arrived at Jaffna on the 14th instant by sea.

Master Oliphant, son of the Chief Justice, arrived at Jaffna by the same opportunity.

*Gang Robbery.*—A gang of robbers supposed to number between 300 and 400 persons, armed with knives and cudgels, made an attack on the salt pans at Vel-

leparavay in Poottoor, on the night of the 14th instant. The watch courageously resisted the attack, and succeeded in securing two of the robbers, who were brought before the District Court the next day and committed to gaol. Another of the robbers was afterwards found by the Police Vidahn, lying in the lake, with a severe wound on his back, of which he died while being conveyed to Jaffna. An inquest was held on the body, and a post mortem examination made, but the Coroner's decision was deferred. On the 16th, another of the robbers was brought to Court with a deep wound on his side, through which the intestines protruded. He was conveyed to the Fort Hospital for medical attention, but died during the following night.

*Death by falling from a tree.*—A few days ago, an inquest was held on the body of a man, who died from injuries received from falling from a palmyra tree. Verdict—*accidental death.*

*Supreme Court.*—Most of the officers of the Supreme court left Jaffna for Chilaw on the 15th inst. The Chief Justice and Lady OLIPHANT, with their son, left on the 17th. The sessions at Chilaw are to commence on the 23d inst.

Mr. Advocate VANDERSTRATAAN has received a warrant to act as Proctor for prisoners at Chilaw; Mr. Advocate HICKS remains for the present in Jaffna.

*Change of the District Courts.*—It is said the Chief Justice, in the late sessions replied to the application of certain parties to have their cases transferred to other courts, that all the District Courts on the northern circuit except those at Jaffna, Trincomalie, Batticaloe, Manaar, Mullativoe, and Chilaw, were soon to be abolished, and Courts of Requests substituted, according to a recent ordinance, sanctioned by the Home authorities.

It is rumoured that a new District Court is to be established somewhere near Varany.

On Wednesday the 14th inst. the Chief Justice visited and examined the Wesleyan Mission Boys' Schools; and on Thursday, the American Mission Seminary at Batticotta. Both Sir ANTHONY and Lady OLIPHANT have manifested a lively interest in the labours of the different missionaries in this part of the province, and in the progress of Christian education amongst the natives.

The *Tenasserim* arrived at Galle on the 14th inst. with Lord ELLENBOROUGH and other passengers.

As the *Seaforth* was getting under weigh from Colombo for Jaffna on the 11th instant, the boilers began to leak rapidly so that she could not leave port. On examining them afterwards some other parts were discovered to be worn nearly through, so that she must now be laid up until the new boilers are received.

*Col. Observer.*

By the *Lady Feversham*, which arrived at Colombo a few days since from Bombay we learn that the *Semiramis* Steamer, which left that port for Suez, with the Overland mail on the 19th July, broke her main shaft when in 60° North Latitude and returned to Bombay on the 29th. *The Sesotris* was immediately got ready for sea, and started next day with the Mails and passengers, but her boilers were in such bad order that they were not expected to hold out during the voyage.—*ib.*

By the same opportunity, we learn that the native population of Bombay was in a state of great excitement and that three regiments were ordered to be on the alert, in consequence of three Parsees and one Musselman having been convicted of *Murder* and sentenced to be hanged. It appears that a short time ago a number of people, principally Parsees, went at mid-night to the house of the Editor of a Native Paper (himself a Parsee) who had rendered himself obnoxious by exposing their mal-practices and murdered him. For this 18 were placed on their trial, out of which 4 (one of them a wealthy Parsee) were convicted of *murder* and sentenced to be hanged on the 3d of August; and several others of *manslaughter*. Every legal practitioner, excepting the public prosecutor, was engaged for the defence—the jury consisted of Europeans—and the trial lasted 10 days. One of the hotels was taken for the accommodation of the jury, where they were closely guarded so that no communication whatever was allowed with them, but they were permitted to take an airing morning and evening with a mounted escort. Large sums of money were subscribed, and every possible exertion made to have the sentence commuted; but the jury refused to recommend the convicted to mercy, and government, it was understood, was inflexibly determined upon having the sentence of *death* carried into execution.—*ib.*

*Extensive fire at Madras.*—The Madras Record states that on Sunday the 11th inst. a fire broke out in a timber yard in Popham's Broadway, Black town, and spread with such violence and rapidity that in half an hour the whole range of about a dozen timber yards were wholly enveloped in flames. The fire was not quenched till Monday morning. The loss of property is estimated at considerably above 100,000 Rupees. One of the wood merchants, it is said, attempted to throw himself into the fire, from despair at his ruinous losses, but was prevented.

*Death of Rev. V. D. Coombes.*—The Rev. V. D. COOMBES, missionary of the Gospel Propagation Society at Combaconum, died at Madras on Saturday, the 10th instant, whither he had gone for the benefit of his health. This is the *seventh* in the missionary ranks that has fallen under the power of death in the current year.

*Baptism of a young Hindu at Calcutta.*–Christian baptism was lately administered at Calcutta to a young Hindu, by Rev. Dr. DUFF of the Mission of the Presbyterian Church. The convert was removed from the missionaries by his relatives five years ago, through fear that he would embrace Christianity. After this long season of indifference, his interest was lately excited anew, and he came to the missionaries for instruction, and after a time took up his residence with them leaving his heathen friends altogether. He has since remained firm in his determination to serve the Christian's God.

*Advantage of going to Law.*—A case involving the right to a wall valued at 50 Rupees, was lately decided at Calcutta to belong to the claimants in common. They had spent together in the suit about 10,000 Rupees.

An elegant model of a locomotive steam engine with a train of three carriages for passengers and luggage has arrived at Agra, as a present from the Court of Directors to the Rajah of Bhurtpore. The height is about 8 or 10 inches, and the length of the engine about 14. It runs on a model railroad, and is propelled by spirits of wine. The makers are Newman and Sons of London.

*A Railway at Bombay.*—A company has been formed at Bombay for a Railway of more than 50 miles in length from Bombay to the Hull and Bore Ghat roads; the cost is estimated at 35 lacs of rupees. We hear that a fifth of the sum has been subscribed; 1500 shares of 500 Rupees each having been taken.—*The friend of India.*

## புதினச் சங்கதி.

### யாழ்ப்பாணம்.

சரீர சுகவீனத்தின் பொருட்டு இவ்விடத்தை விட்டுப்போன இஸ்போல்டிங்கு ஐயர் அம்மா அவர்கள் பிறகிட்ட ஆனி ௴ ௨௯ ௳ லொங்தோமிற் சேர்ந்து ஆடி ௴ ௭ ௳ அளவில் அமேரிக்காவுக்குப் போகப்புறப்பட்டுவிட்டார்களென்றும், மேற்படி கற்றிங்ஸ ஐயர் அம்மா அவர்கள் ஆனி ௴ முதற்றேதியில் அமேரிக்காவிற்போய்ச் சேர்ந்துவிட்டார்களென்றுஞ் செய்திவந்தது.

கள்ளர் கூட்டம்.—இந்த மாதம், ௰௪. தேதி புதன் கிழமை இராத்திரி, ஙா. சா. பேரளவுக்குத் திருடர் ஒருமிக்கக்கூடி விக்கினங்களை வருத்துவிக்கத்தக்க கத்தி பொல்லு முதலிய ஆயுத வருக்கங்களையும் அணிந்துகொண்டு புத்தூருக்குப் போய் அக்கோவிற்பற்றைச் சார்ந்த வெள்ளைப் பரவையென்கிற உப்பளத்திற் சென்று உப்பள்ளுகையில் அங்கிருந்த காவற்காரர் படைபோல வந்த திருடருக்கு அதிகம் பராக்கிரமத்துடன் புறங்காட்டாதெதிர்த்து நின்று அவர்களைத் துரத்தி இரண்டு பேரை மாத்திரம் பிடித்துக் கட்டி மற்றநாட் காலமே, ௰௫. ந் தேதி கோட்டுக்குக்கொண்டுவந்து மறியலுக்கொப்புவித்தார்கள். மேற் சொல்லிய திருட்டுக்கூட்டத்துடன் வந்த வேறொருவன் சாவத்தக்கவனாய் முதுகிலே பாடான காயம்பட்டவனாய்ச் சேற்றிலே புதைந்து கிடந்ததைப் போலீசு விதானை கண்டு பிடித்துக்கொண்டு யாழ்ப்பாணக் கோட்டுக்கு வருகிற வழியில் மரணமடைந்துவிட்டான். மற்ற நாள், ௰௬. ந் தேதியும் இக்கூட்டத்தைச் சேர்ந்த வேறொரு திருடனுடைய விலாவிலுலே மணிக்குடல் சரியத்தக்க காயம்பட்டவனுயக் கோட்டுக்குக் கொண்டுவந்து கோட்டையிற் பரிகாரியிடங் காவிக்கொண்டு போய் மருந்து செய்வித்தும் அடுத்த நாள் இராத்திரி அவனும் மரணமடைந்துவிட்டான்.

டிஸ்திறிக் கோடுகள் எடுபடுவதைப் பற்றி—யாழ்ப்பாணம், திருக்கோணமலை, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, சலாபம் முதலிய இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்ற டிஸ்திறிக் கோடுகளைத் தவிர மற்றும் வடநாடுபற்றிலுள்ள டிஸ்திறிக் கோடுகளைத்தும் எடுபட்டுப்போக அவைகளுக்குப் பதிலாக "றிக்குவெஸ்ற்று" என்று பேர்கொண்ட கோடுகள் அந்தந்த இடங்களில் வைக்கப்படுமென்றுந் தென்மறாட்சி பச்சிலைப்பளியைச் சார்ந்த வரணிக் கோவிற்பற்றிற் புதிதாய் ஒரு டிஸ்திறிக் கோடு நியமிக்கப்படுமென்றும் ஒரு பேச்சுண்டு.

சோதனைச்சமாசாரம்.—இந்த மாதம், ௰௪. ந் தேதி புதன் கிழமையிலன்று மேலான சங்கை பொருந்திய நீதியதிபதியவர்கள் வணக்கம் பொருந்திய பார்கிவல் ஐயரவர்களால அதிகம் நன் முயற்சியுடன் படிப்பிக்கப்பட்டு வரும பள்ளிக்கூடங்களையும், ௰௫. ந் தேதியிலன்று வட்டுக்கோட்டையில் அமேரிக்கன் மிஷியோன் சாஸ்திரப் பள்ளிக்கூடத்தையும் பரீட்சித்து அவைகளிற் கற்கும் வித்தியார்த்திகள் லௌகீக வைதிக சாஸ்திரங்களில் மிகவுந் தேர்ச்சிகொண்டவர்களாய்க் காணப்பட்டதையும், பற்பல வகையான குருமார்கள் இந்த வடநாடுபற்றிற் பிரயாசப்பட்டுவரும் நலத்தையுங் கண்டு மிகவும் சந்தோஷங்கொண்டு பதினேழாந் தேதி யாழ்ப்பாணத்தை விட்டுத் தாமும் தமது நாயகியும் புத்திரனுமாகச் சலாபத்துக்குப் போய்விட்டார்கள். அவ்விடத்திலே, ௨௩. தேதி சுப்பிறீங்கோடு கூடப்படும்.—மன்னாரிற் கோட்டிற் பாரப்படுத்திவைத்த வழக்குகளுஞ் சலாபத்திலே விளங்கப்படுமென்று நினைக்கிறோம்.

### வெம்பாய்.

௪௫வது.— இன்னமும் நிருபிக்கப்படுகிறதாவது—கள்ளர் ஒளித்திருப்பதை விலக்கவும் பிரசித்தமான பாதை ஒடைகளைக் காப்பாற்றவும் அவைகளிற்போகிறவருகிறவர்களுக்கு வசதியாயிருக்கப்பண்ணவுங் காற்றுத் தடையில்லாமல் வீசி யதிலே சனங்களுக்குச் சுகமும் ஆறுதலும் உண்டாயிருக்கும்படி பண்ணவும் ஒத்தபிரகாரமாக அவ்வித பட்டணமெல்லைமானங்களுக்குள்ளாக யாதொரு தெருவழி ஒடை அல்லது ஒழுங்கைக்கடுக்கவிருக்கும் யாதொரு தோட்டம் அடைப்பு கோட்டு அல்லது மறுவிடங்களுக்குள்ளாக வளருஞ் சகல மரங்கள் அல்லது செடிகளையும் வெட்டவுந் தறிக்கவுங் கட்டையாக்கவும் வேண்டும்.

## யாதொரு தெரு அல்லது வழிகளில் யாதொரு மரஞ்செடி முதலானவைகளை நாட்டப்படாதென்றது.

இன்னமுஞ் சகல தழை கம்பு வேலியையும் அதின் முழு நீளத்திற் சரியரைவாசிக்கு மேற்படாமல் எட்டடி உயரத்துக்கு மேற்படாமலிருக்கும்படி கட்டையாகத் தறித்து வைத்திருக்கவேண்டும். இதுவுமந்த எட்டடி உயரத்துக்கு மேற்படவிடக்கூடிய அவ்வித தழை கம்பு வேலியின் பிறிவின்னதென்பதின் பேரிற் போலிஸ் சுப்பறிந்தெந்து துரையுடைய சம்மதி அறிந்துகொள்ளவேண்டும்.—மேலும் நிருபிக்கப்படுகிறதாவது— அவ்வித யாதொரு பட்டினமெல்லைமானங்களுக்குள்ளாக இந்தக் கட்டளை நிருபித்தல் பெலன்கொண்டு வழங்கத்தொடங்கின காலந் தொடங்கி அதற்குப் பிற்பாடு அவ்வித பட்டணமெல்லைமானங்களுக்குள்ளாக யாதொரு பிரசித்தமான தெரு அல்லது பாதையில் யாதொரு மரம் செடி அல்லது பற்றை நடப்படாது. இதுவுமவ்வித யாதொரு மரம் செடி அல்லது பற்றை நடுகிற ஒவ்வொருவருங் குற்றவாளியாகக் காணப்பட்டு அப்படியே அதற்குக் குற்றப்பட்டபோது ஐந்து சிலிங்குக்கு மேற்படாத எந்த ஒரு தெண்டத்துக்கும் ஏதுவாய் இருப்பார்கள்.

## இடைஞ்சல்களை எப்படி அகற்றி விலக்கப்படுமென்றது.

௪௬வது.—இன்னமும் நிருபிக்கப்படுகிறதாவது—இந்தக் கட்டளை நிருபித்தலின், ௪௩ம். பிறிவிற் கண்டிருக்கிறயாதொரு இடைஞ்சலாள் அதிகம் பிடித்தல் அல்லது தடங்கல்களைப் பண்ணுகிற அல்லது பண்ணிவைத்திருக்கிற எவரும் அத்தை உடனே அகற்றிப்போடும்படி அல்லது அப்புறப்படுத்தும்படி வாய் மொழியாக அவர்களுக்குக் கட்டளையிட அல்லது எழுத்தின் பேரில் ஒரு அறிவித்தலை அவர்கள் வசமாகக் கொடுபடும்படி அல்லது அவ்வித இடத்தின் சில வெளிகண்டமான புறத்திலறைந்துவைக்கும்படி பண்ணிக் கட்டளையிடவும் இன்னமும் யாதொரு வீடு சாப்பு தோட்டம் அல்லது மறு இடங்களை உடையவர்கள் அல்லது அத்தை அட்சிபண்ணுகிறதாக அத்தைச் சுற்றிலும் நேராகவடைக்கும்படிக்கு அல்லது யாதொரு கிணற்றைச் சுற்றிலும் இரண்டடிக்குக் குறையாத உயரமுள்ள சுவரினால் நேராகவடைக்கும்படி அல்லது சகல வேலி மரங்கள் அல்லது செடிகளையும் இந்தக கட்டளை நிருபித்தலின், ௪௫ம். பிறிவிற் கற்பித்திருக்கிற பிரகாரம் வெட்டவுந் தறிக்கவுங் கட்டையாக்கவும் அல்லது அவ்வித பட்டினமெல்லைமானங்களுக்குள்ளாக இந்தக் கட்டளை நிருபித்தல் பெலன்கொண்டு வழங்கிவரத் தொடங்கின பின்பு யாதொரு தெரு அல்லது பாதைக்குள்ளாக நடப்படும் யாதொருமரஞ்செடி பற்றைகளை வெட்டவும் பிடுங்கவும் அப்புறங்கொடுபோகவும் அவ்விதமாகவே கட்டளையிடவுஞ் சொற்வயற்யென்றால் அல்லதவருடைய அசிஸ்தாந்து அல்லது போலிஸ் சுப்பறிந்தெந்துதுரைக்கு நியாயமாயிருக்கும். இன்னமும் இந்தக் கட்டளை நிருபித்தலிற் கண்டிருக்கும் வேறியாதொரு பொது இடைஞ்சற்களைப் பண்ணுகிற எவரையும் அத்தை அகற்றிக் குறைக்கும்படி ஒன்றில் வாய்மொழியாக அல்லது எழுத்தின் பேரில் அறியக்கொடுத்துக் கட்டளையிடுகிறது போலிஸ் சுப்பறிந்தெந்து துரைக்கு நியாயமாய் இருக்கும். இதுவுமப்படியான கட்டளை அல்லது அவ்விதத்திற் கொடுபட்ட அவ்வித யாதொரு உடையவர்கள் ஆட்சிக்காரர் அல்லது மறுபேர் அவ்விதகட்டளையை ஒரு நியாயமான அவதியிற்குள்ளாக நிறைவேற்ற மாட்டோமென்க அல்லது அசட்டைபண்ணச் சம்பவித்தால் அல்லது அவ்வித கட்டளை அல்லது அறிவித்தல் கொடுபடவேண்டிய சரியான ஆளின்னாரென்பதின் பேரிற் சந்தேகமுண்டாயிருந்தால் அல்லது இந்தக் கட்டளை நிருபித்தலின், ௪௩ம். பிறிவிற் கண்டிருக்கிற அதிகம் பிடித்தலை அல்லது தடங்கல்களைப் பற்றிச் சில காரியத்தில் சொற்வயற்யென்றால் அல்லது அவருடைய அசிஸ்தேந்து அல்லது போலிஸ் சுப்பறிந்தேந்து துரையாற் கொடுக்கும்படி இதற்கு மேலே அவர்களுக்குத் தத்துவங் கையாளிக்கப்பட்ட கட்டளை அல்லது அறிவித்தல கொடுபட்டபோதவ்வித கட்டளை ஒரு நியாயமான அவதியிற்குள்ளாக நிறைவேற்றமாட்டோமென்க அல்லது அசட்டைபண்ணச் சம்பவித்தால் அல்லது அவ்வித கட்டளை அல்லது அறிவித்தல் கொடுபடவேண்டிய சரி ஆளின்னாரென்பதின் பேராற் சந்தேகமுண்டாயிருந்தால் அவ்வித மேலதிகம் பிடித்ததை அல்லது பொது இடைஞ்சலில் யாதொன்றை உடனே அகற்ற அல்லது குறைக்கப்பண்ணுவது சொற்வயற்யென்றால் அல்லது அவருடைய அசிஸ்தாந்து அல்லது போலிஸ் சுப்பறிந்தேந்து துரைக்கு முறைமையாய் இருக்கும். இதுவுமதுகாரணத்துக்காகத் தேவையானபோது யாதொரு வீடு தோட்டம் அடைப்பு அல்லது மறு இடங்களிலுட் புகுதுகிறது இன்னமுந் தேவையாகக் கண்ட ஆட்கள் ஆயுதங்கள் முதலானவைகளை அதிலுட்படப்பண்ணுகிறதுமவ்வித மகற்ற அல்லது குறைக்கிறதற்காகத் தேவையான சகல காரியங்களையும் அதிற்செய்கிறதல்லது செய்விக்கிறதுஞ் சொற்வயற்யென்றால் அல்லதவரின் அசிஸ்தாந்து அல்லது போலிஸ் சுப்பறிந்தெந்து துரைக்கு நியாயமாயிருக்கும். இன்னமுஞ் சொற்வயற்யென்றால் அல்லதவரின் அசிஸ்தாந்து அல்லது போலிஸ் சுப்பறிந்தெந்து துரையால் அவ்விதமகற்ற அல்லது குறைக்கிறதற்காக நிச்சயமாக விடப்பட்ட செலவை அதற்குத் தகுமான போலிஸ் மஸ்திருத்துக்குறுதிப்படுத்தும்போது அதை விளங்கி அவ்வித செலவு நேராகச் செலவழிக்கப்பட்டதாகத் தோற்றுங் காரியத்தில் அவ்வித யாதொரு கட்டளை அல்லது அறிவித்தல் நிறைவேற்றாமல் எத்திறத்தான் அசைச்சலீனமாகநடந்த நிமித்தியமந்தச் செலவுண்டாயிற்றோ அந்தத்திறத்தானொரு குறித்த நாளிற் தன் முன்பே வெளிப்பட்டு அந்தச் செலவை இறுக்கும்படி அவனை அவ்வித போலிஸ் மஸ்திருத்து முதன்மையாயிருக்குங் கோட்டுத்தீர்ப்பினால் உண்டான யாதொரு தண்டமல்லது அபராதத்தை அவரெப்பிரகாரமாக அறவிடுவாரோ அப்பிரகாரமாகத்தானே அந்தச் செலவையும் அவர் அறவிடத்தொடங்குவாராக.

## தேவையற்ற கடுமை அல்லது புரளித்தனமான தொந்தரவு குற்றமென்றது.

௪௭வது —இன்னமும் நிருபிக்கப்படுகிறதாவது—மேலதிகம் பிடித்ததை அல்லது யாதொரு தடங்கலை விலக்குதலல்லதகற்றுகிறதல்லது யாதொரு இடைஞ்சல்கள் அல்லது தொந்தரவை அ

மத்துகிற சாட்டின் பேரில்த் தேவையற்ற கடுமைசெய்கிறதல்லது அவசரமற்றதுவும் புரளித்தனமானதுவுமான தலையடியுண்டுபண்ணுகிற எவருங் குற்றவாளியாகக் காண்ப்பட்டு அப்படியே அதற்குக் குற்றப்பட்டபோது ஐந்து பவுனுக்கு மேற்படாத எந்த ஒரு தெண்டத்துக்கும் அல்லது தெண்டிப்பான வேலையுடனேனு அல்லது வேலையில்லாமல் மூன்று மாதங்களுக்கு மேற்படாத எந்த ஒரு அவதிமறியலுக்கும் ஏதுவாய் இருப்பார்கள்.

### போலிஸ சேர்வையைக் காப்பாற்றும்படி வீடுகளின் பேரில் ஒரு வரியை அறவிடப்படுமென்றது.

௪௮அவது.-இன்னமும் நிருபிக்கப்படுகிறதாவது—அவ்விதபட்டணமெல்லைமானங்களுக்குள்ளாக அவ்வித போலிஸ சேர்வையை வைத்துக் காப்பாற்றுவதற்குப் போதுமான ஒரு பொக்கிஷத்தைக் கூட்டம்பண்ணுவதற்காக அவ்வித பட்டணமெல்லைமானங்களுக்குள்ளாக இருப்பதான சகல வீடுகள், பண்டகசாலைகள், சாப்புக்கள், கடைகள், மறு இடங்களின் பேரில் அவ்வித குடியிருப்புள்ள வீடுகள், பண்டகசாலைகள், சாப்புக்கள், கடைகள் மறுவிடங்களிலொவ்வொரு வருஷப் பெறுமதியின் பேரில் நூற்றுக்குப் பத்துக்கு மேற்படாததொகையான ஒரு வரியைப்பங்குனி மாதம், ௨௧.ந் தேதியிலும் ஆனி மாதம், ௨௰.ந் தேதியிலும் புரட்டாதி மாதம். ௨௰.ந் தேதியிலும் மார்கழி மாதம, ௨௧ ந். தேதியிலும் இந்தத் தேதியொவ்வொன்றிலும் முடிவாகிற மூன்று மாதங்களின் கணக்குக்காக இறுப்படவுமறவிடவுந் தேசாதிபதியவர்கள் அரண்மனை ஆலோசனைச்சங்கத்தாரின் ஆலோசனையுட்பட்ட அரசாட்சியின் கெசெற்றென்னும் புதினக் கடதாசியிற் பிரசித்தப்படுத்தப்படும் பிரபலபத்திரத்தினாற் கட்டளையிடுகிறது முறைமையாயிருக்கும். இதுவுஞ் சொல்லப்பட்ட வீடுகள், பண்டகசாலைகள், சாப்புக்கள், கடைகள் மறுவிடங்களின் வருஷாந்தப் பெறுமதி இன்னதென்று சொல்லப்பட்ட வீடுகள், பண்டகசாலைகள், சாப்புக்கள், கடைகள், மறுவிடங்களை வாடைக்குக் கொடுத்திருக்கிற அல்லது பிடித்திருக்கிற நிச்சயமான வருஷ வாடைக்கணக்காக அல்லது மறுவித வாடைப்பணம் அல்லது பெறுமதியின் பிரகாரம் மதிக்கப்படும் அல்லது மேற் சொல்லப்பட்ட யாதொரு குடியிருக்கும் வீடு, பண்டகசாலை, சாப்பு, கடை அல்லது மறுவிடத்திலுடையவன்தானே குடியிருந்தால் அல்லது ஆட்சிபண்ணினால் அல்லது அதிலொருவருங் குடியில்லாமல் அல்லது ஆட்சிபண்ணிவராதிருந்தால் அதற்கயலில் அந்தத் தரவழியான மறு வீடுகள், பண்டகசாலைகள், சாப்புக்கள், கடைகள் மறுவிடங்களின் பேரிற் கொடுக்கப்படும் வாடைப்பணத்தின்கணக்காக அவைகளின் வருஷப் பெறுமதியை மதிக்கப்படும். ஆகிலும் அப்படி இறுக்கப்படுவதும் அறவிடப்படுவதுமான வரி ஏதுகாரியத்திலாகுதல் வருஷமொன்றுக்கு இரண்டு சிலினுக்குக் குறையப்படாது. இன்னமும் யாதொரு இஸ்ப்பிரித்தால் வீடு அல்லது தேவாராதனை அல்லது மறு பொதுப் பாவிப்புக்காக வைக்கப்பட்ட யாதொரு கட்டுக்கோப்புகளின் பேரில் மேற்குறித்த வரி இறுக்குமதியாக அல்லது அறவிடத்தக்கதாயிருக்கமாட்டாது.

### வரிமதிக்குங் கோம்மிற்றி.

௪௯.—இன்னமும் நிருபிக்கப்படுகிறதாவது—அவ்வித பட்டணமெல்லைமானங்களுக்குள்ளாகக் குடியிருக்கும் வீடுகள், பண்டகசாலைகள், சாப்புகள், கடைகள், மறுவிடங்களின் ஒவ்வொரு வருஷப் பெறுமதியை மதிக்கிற அலுவல் தேசாதிபதியவர்களால் வருஷந்தோறும் மார்கழி மாதம் முப்பத்தொராந் தேதியினின்று அல்லது அதற்கு முன்னிதாக அத்தை அடுத்துவரும் வருஷத்துக்கென்று ஐந்து பேருக்கு மேற்படாமலும் மூன்று பேருக்குக் குறையாமலும் நியமிக்கப்படும். அவ்வித பட்டணமெல்லைமானங்களின் போதுமான குடியானபேர்கள் கூடிய அசேஸசர்மாரென்ற மதிப்புக்காரரின் ஒரு கொம்மிற்றிமாரால் நடத்தப்படும்.—ஆகிலும் அவ்வித யாதொருபட்டணமெல்லைமானங்களுக்குள் இந்தக் கட்டளை நிருபித்தல் பெலன்கொண்டு வழங்கத் தொடங்கின வருஷத்துக்கதில் நியமிக்கப்படும் அசேஸசரென்ற மதிப்புக்காரரை இந்தக்கட்டளை நிருபித்தல் பெலன்கொண்டு வழங்கிவரத் தொடங்கின முப்பது நாளையிற்குள் எந்த வேளையிலும் நியமிக்கலாம். மேலும் அவ்வித அசேஸசர்மாரை நியமிக்கப்பட்டதின் பிறகு அவர்கள் யாதொருவர் மரணித்தால் பணிவிடைக்குத் திறமில்லாதவனாய் அல்லது தப்பித நடத்தையுடையவனாய்க் காணப்பட்டால் தேசாதிபதியவர்கள் தன் கருத்துப்படி அப்படியிறந்துபோன அல்லது தப்பிதமாய் நடந்து அல்லது வேலைபார்க்கத் திறமில்லாதவனாய்க் காணப்படும் பேருடைய இடத்துக்கு வேறொரு அசேஸசரை நியமிக்கக்கூடியதாயிருக்கும். இதுவும் அவ்வித யாதொரு கொம்மிற்றியில் யாதொருவரானாலும் நெடுகிலும் ஒருவருஷத்துக்கு மேலதனமாய் அல்லது ஒவ்வொரு ஐந்து வருஷத்துக்கு ஒருமுறைக்கதிகமாய் அசேஸசரின் பணிவிடைசெய்யக் கடனாளியாயிருக்கமாட்டான்.

### அசேஸசர்மார் சுதந்திரத்துக்தரித்தாளியாயிருப்பார்கள் என்றது

௫௰வது.—இன்னமும் நிருபிக்கப்படுகிறதாவது—அசேஸசராய் நியமிக்கப்படும் ஒவ்வொருவர் தேசாதிபதியவர்களால் அவர் கருத்தில் முடிவுபண்ணுகிற பிரகாரமாக நன்கொடையைப் பெற உரித்துடையவர்களாயிருப்பார்கள். ஆகிலும் அசேஸசர்மாருக்குப் பிறிவிடப்படும் முழுத்தொகை எந்தக் காரியத்திலானாலும் அன்பது பவுனுக்கு மேற்படமாட்டாது.

### வேலை நடத்தமாட்டோமென்பவர்களுக்கு அபராதம்.

இதுவும் அசேஸசராய் நியமிக்கப்பட்ட யாதொருவர் இந்தக் கட்டளை நிருபித்தலின் யாதொரு பிறநீக்கல் அல்லது ஏற்பாடுகளின் கீழாக அந்த வேலையால் மன்னித்துவிட அல்லது நிவாரணப்படுத்திவிட உரித்துடையவனல்லாதிருந்து தன்னை அப்படி நியமிக்கப்பட்ட செய்தியை அந்த நாட்டின் அரசாட்சியின் ஏசன்று அல்லது அசிஸதாந்து ஏசன்றுத் துரையால் முறைமையாகத் தனக்கறிவிக்கப்பட்டதின் பின் நல்ல போதுமான முகாந்திரமின்றி அந்த உத்தியோகத்தை நடத்த அசட்டைபண்ண அல்லது மாட்டோமென்கச் சம்பவித்தாற் குற்றவாளியாகக் காணப்பட்டு அப்படியே அதற்குக் குற்றப்பட்டபோது பத்துப் பவுன் ஒரு தெண்டத்துக்கெதுவாயிருப்பான்.

### மதிக்கிற விதம்.

௫௧வது.—இன்னமும் நிருபிக்கப்படுகிறதாவது—அவ்விதகொம்மிற்றியானது தங்கள் நியமிக்கப்பட்டதின் பிறகு தேவையற்ற தாமதமின்றி விசாரணை செய்யத் தொடங்கி அவ்வித பட்டணமெல்லைமானங்களுக்குள்ளாக இருக்கப்பட்ட பலகுடியிருப்புள்ள வீடுகள், பண்டகசாலைகள் சாப்புகள், கடைகள், மறு இடங்களின் வருஷப் பெறுமதியையும் அவைகளொவ்வொன்றின் பேரில் இத்தால் நியமிக்கப்பட்டிருக்கிறதுங் கொடுக்க வேண்டியதுமான வரியையுந் தாங்கள் அறிந்த மட்டும் கருத்திலெண்ணுகிற மட்டும் மேற்சொன்ன பிரகாரமாக நிதானித்து மதிப்புப்பண்ணி அப்படிப் பண்ணப்பட்ட மதிப்பை அந்த நாட்டின் அரசாட்சியின் ஏசன்று அல்லது சில அசிஸதாந்து ஏசன்றுத் துரைக்கச்சணமே றெப்போடுத்துப் பண்ணுவார்களாகவும். அவர்களோவெனில் வேண்டியபோது இலகுவாய்ப் பார்க்கக்கூடியவொரு அட்டவணை அல்லது மறுமாதிரியையுடைய யாவரும் பார்க்கப்போதுவாய்த் தங்கள் ஆபிசில் வைத்திருக்க வேண்டிய ஒரு புஸ்தகத்தில் அந்த மதிப்பைப் பதியும்படி பண்ணவேண்டும்.

### வரிமதிப்பின் நோத்தீசைக் கோடுத்துப் பணங் கேட்கிறதைப்பற்றி.

இன்னமுஞ் சொல்லப்பட்ட அரசாட்சியின் ஏசன்று அல்லது அசிஸதாந்துஎசன்றுத்துரை காரியத்துக்குத்தக்கது கட்டத்தட்ட இந்தக்கட்டளை நிருபித்தலுடன் இசைத்திருக்கும் மாதிரியாக எழுதவேண்டிய ஒரு நொத்தீசென்ற அறிவித்தலைக் கொடுத்தனுப்பவேண்டும. அந்த நொத்திசை ஆட்களுடைய கைவசத்திற் கொடுக்கவேண்டும், அல்லது வரிமதிக்கப்பட்டிருக்கிற குடியிருக்கும் வீடு, பண்டகசாலைகள், சாப்புகள், கடைகள், மறுவிடங்களிலிருக்கும் சில ஆட்களிடம் அத்தை வைத்துவிட்டுப் போகவேணும். அல்லது அவைகளில் அப்படி ஒருவருமில்லாதிருந்தால் அல்லது அதின்பேரில் அதுவரைக்கும் வரவேண்டியதுஞ் சொல்லவேண்டியதுமான மூன்று மாதத்து வரியைக்கேட்டு அவைகளின் பேரிற் பண்ணப்பட்ட வரிமதிப்புக் கணக்கினறிவித்தலைக் கொடுக்கும்படி தெண்டிக்கிற பேரை உள்ளே போக இடங்கொடுக்கமாட்டோமென்கச் சம்பவித்தால் அப்பொ அந்தக் குடியிருக்கும் வீடு பண்டகசாலை, சாப்பு, கடை, அல்லது மறுவிடங்களின் சிலவெளிகண்டமான புறத்திற் சொல்லபட்ட நொத்திசைப் பதித்து வைக்கவேணடும்.

## பறேட் எஸ்க்கூவிட்டு வரியறவிடலாமென்றது.

இதுவும் இந்தப் பிரகாரமாகவே சொல்லப்பட்ட வரிப்பணத்தின் மற்று மூன்று தவணையிலெவ்வொரு ஒடுக்கு மதிப்பணத்தைக் கேட்டுத் தானும் அவ்வித நொத்தீசுகொடுபடவேணும். ஆனால் அப்படிப்பட்ட நொத்தீசுகொடுத்துக் கேட்டபின்னொரு மாதத்தைக்குள்ளே யாதொரு மூன்று மாதத் தவணை வரிப்பணஞ் செலுத்தப்படாதவளையில் அதின் தொகை எவ்வளவாயிருந்தாலும் அது கொடுபடவில்லையென்று தகுமான யாதொரு கோட்டுக்கேற்க ஒப்பனைபண்ணுவதின் பேரால் காணியுடையவன் அல்லது அவைகளின் ஆட்சிக்காரன் வரிமதிப்பைத்தொட்டு அப்பலரித்து அந்த அப்பலுங் கடைசியாகத் தீர்மானமாகாமவிருந்தால் தவிர மற்றப்படி சொல்லப்பட்ட கோட்டிவிருந்து அந்தக்குடியிருக்கும் வீடு, பண்டகசாலை, சாப்பு, கடை அல்லது மறுவிடத்திற் குடியிருக்கிற பேருக்கு விரோதமாகப் பறேட்டு எஸ்க்கீசுவிட்டடனே அந்தப் பணத்தை அறவிடப்படும் அல்லது ஆட்சிபண்ணும் பேர் அந்தவீடு வாசற்கலையுடைய சொந்தக்காரனல்லாமவிருந்து அந்த மூன்று மாதத் தவணை வரிப்பணஞ் சம்பூரணமாக முன்னம் அல்லது அவனுடைய ஆசனபாதனங்களின் பேரிற் சொலலப்பட்ட எஸ்கீசையை நிறைவேற்றமுன்னங் குடியெழும்பிச் செல்லவேண்டிய பணஞ்சரிவர அறவுபண்ணக் கூடிய போதுமான ஆதனங்களை வைக்கப்பட்டிராதிருந்தால் அல்லது அவ்வித ஆட்சிக்காரன் இன்னமதிற் குடியிருந்து அந்த வரிப்பணத்தை இறுக்கக்கூடாதவனாயிருந்தால் அல்லது அந்த வீடு வாசல் முதலானதிற் குடியில்லாமவிருந்தால் அப்போ அவ்வித குடியிருக்கும் வீடு, பண்டகசாலை, சாப்பு, கடை அல்லது மறு இடங்களையுடைய சொந்தக்காரனிடமிருந்து மேற்சொன்ன மாதிரியான பறேட்டு எஸ்க்கீசுகொண்டறவிடப்படும் இதுவும் வாடைக்கிருக்கிறவன் கொடுக்கப் பிசகினாற் சொந்தக்காரனே வகைபண்ணக் கடவானென்றித்தால் வெளியாங்கம் பண்ணப்படுகுது.

## டிஸதிறிக் கோட்டுக்கு அப்பல்.

௩௨ வது.—ஆகிலும் இன்னமும் திருபிக்கப்படுகிறதாவது—யாதொரு குடியிருக்கும வீடு, பண்டகசாலை, சாப்பு, கடை அல்லது மறுவிடங்களையுடைய யாதொரு சொந்தக்காரன அல்லது அவைகளை ஆட்சிபண்ணிவரும் யாதொருவர் அவைகளின்பேரில் மதித்திருக்கும யாதொரு வரிமதிப்பு அந்த அசேஸசர்மாரால் முறைமையாக அல்லது சரியாகப்பண்ணப்படவும் நிதானிக்கப்படவுமில்லையென்று நினைப்பார்களேயானால்அப்படிபபட்ட ஒவ்வொருசொந்தக்காரன் அல்லது ஆட்சிக்காரனுக்கும் அத்தைத்தொட்டு டிஸதிறிக்கோட்டுக்கு அப்பற்கேட்கிறது நியாயமாயிருக்கும். அவ்வித அப்பற்கேட்கிறது எல்லாக் காரியத்திலும்சொலலப்பட்டகுடியிருக்கும் வீடு, பண்டகசாலை, சாப்பு, கடை அல்லது மறு இடங்களின் வரிமதிப்பைத்தொட்டு நொத்தீசென்ற அறிவித்தல கொடுபட்ட இதுவும்மூன்றுமாதவரிப்பணங்கேட்கப்பட்ட நாட்தொடங்கிப் பத்து நாள்த் தவணைக்குள்ளாகக் கேட்கவேண்டியதுமல்லாமல் சொலலப்பட்ட அப்பலைத்தொட்டும் அதின் விசேஷமான நியாயங்களைத்தொட்டுமெ சொல்லப்பட்ட அரசாட்சியின் ஏசன்று அல்லது அசிஸதாந்து ஏசன்றுத் துரைக்கு நொத்தீசென்ற அறிவித்தல கொடுக்கவேண்டும். இதுவும அவவித கோட்டானது அவ்வித அப்பலின் பிசகான தொகை எவ்வளவாயிருந்தாலும் அத்தைச் சுருக்கமாக விளங்கித்தீர்மானித்து அதின் செலவுமுன்னபுறமென்று முடிவுபண்ணுவார்களாக.

## தத்துவ தூஷணம்

௩௩வது.—இன்மும் திருபிக்கப்படுகிறதாவது—யாதொருபோலிஸ் சுப்பறிந்தேந்துத் துரை அல்லது அதின் உத்தியோகஸதர்யார் இந்தக் கட்டளை திருபித்தவினால் அவர்களுக்குப் பாரமாக்கப்பட்டிருக்குந் தத்துவங்கள் அல்லது அதிகாரங்களில் யாதொன்றைத் துட்சணக்கிறமமாய் அல்லது வைராக்கியமாய் நடத்தச் சம்பவித்தால் அல்லது மனதறிய அப்படிப்பட்ட தத்துவங்கள் அல்லது அதிகாரங்களுக்கு யாதொரு விதங்களில் மிஞ்சிநடந்தாற் குற்றவாளியாகக் காணப்படுவார்கள்.

## போலிஸ உத்தியோகஸத்தருக்கெதிர்த்து நிற்பதற்கு அபராதம்.

௩௪வது.— இன்னமும் திருபிக்கப்படுகிறதாவது—யாதொரு போலிஸ சுப்பறிந்தேந்து அல்லது போலிசுக்குச் சேர்ந்த மறு உத்தியோகஸதர் சொற்வயற்யென்றால் அல்லது அவரின் யாதொரு அசிஸதாந்து அல்லது யாதொரு போலிஸ சுப்பறிந்தேந்து, சொற்வயற்யென்றால் அல்லது அவரின் யாதொரு அசிஸதாந்துவின்முறைமையான தத்துவத்தின் கீழாக வேலைநடத்தும்யாதொருவா அவர்களுக்கு இந்தக் கட்டளை திருபித்தவினாற் பாரமாக்கப்பட்ட செய்கடன்யாதொன்றைச் செய்துநிறைவேற்றுமிடத்தில் அவர்களைத் தடைசெய்தால் அல்லது தொந்தரவுபண்ணினால் அவ்வித ஒவ்வொருவரும் குற்றவாளியாகக் காணப்பட்டு அப்படியே அதற்குக் குற்றப்பட்டபோது ஐந்து பவுனுக்குமேற்படாத ஒரு தெண்டத்துக்கு அல்லது தெண்டிப்பான வேலையுடனே அல்லது வேலையில்லாமல் மூன்று மாதங்களுக்கு மேற்படாத எந்த ஒரு அவதிமறியலுக்குமேதுவாயிருப்பாரகள்.

## இந்தக் கட்டளை திருபித்தலுக்கு விரோதமாகச் செய்த குற்றத்துக்கு ஆக்கினைப்பட்டதினால் அவ்வித குற்றவாளி சிவில் முறையாக நட்டஞ் சரியிடுதலால் நிவாரணையாயிருக்கமாட்டானென்றது.

௩௫ வது—இன்னமும் திருபிக்கப்படுகிறதாவது—தங்கள் செய்கைத் தப்பிதத்தினால் யாதொருவர் இந்தக் கட்டளை திருபித்தவின் வரைவுபாடுகளின் கீழாக ஆக்கினைக்குளரான போதிலும் அவ்வித ஆக்கினை அல்லது அதற்குளரானகாரணத்தினால் அவ்விதசெய்கைத் தப்பிதம் நடந்த பேருக்கு அத்தாலுண்டான சேதபாதத்தைச் சிவில் முறையாக மேலும் இறுக்கவேதுவாயிருப்பதை அது எவ்விதத்தலாகுதல் சாரமாட்டாது.

௩௬ வது.—இன்னமும் திருபிக்கப்படுகிறதாவது—ஆயிரத்தெண்ணூற்று நாற்பத்திநாலாம் ஆண்டு தை மாதம் முதற்றேதியன்று இந்தக் கட்டளை திருபித்தல் பெலனகொண்டு வளங்கிவரும்.

ஆலோசனைச் சங்கத்திலே தீர்மானமாகி ஏற்படுத்தப்பட்டது ஆயிரத்தெண்ணூற்று நாற்பத்துமூன்றும் ஆண்டு, கார்த்திகை மாதம், எட்டாந் தேதி.

மேன்மைதங்கிய தேசாதிபதியவர்களின் கட்டளைப்படி
(ஒப்பம்வைத்தது) பி அனிஸதுறுதர்,
கோலோனியல சக்கிடுத்தார்.

---

## ஞானக்கும்மி.

[Satirical Poem on the superstitions of the Hindus.]

### தாலிகள் செய்யத் தகுமுறை.

௱௪௧. சிலுவையினடையாளமல்லோ நீ
சிறந்துதீட்சையிற்பெற்றகுறி
சிலுவையினடையாளமற்றுவினிச்
செயமதெங்கடி ஞானப்பெண்ணே.

௱௪௨. சிலுவையினடையாள்முன்னுட
தேவனார்பாட்டுக்கடையாளம்
சிலுவையினடையாளத்தாலியைச்
சிறந்துகட்டடி ஞானப்பெண்ணே.

௱௪௩. சிலுவையின் கொடிகொண்டேரோப்பையர்
தேசமெங்குஞ் செயித்தார்கள்
சிலுவையினடையாளமுற்றிலுஞ்
செயஞ்செயமடி ஞானப்பெண்ணே.

௱௪௪. தேவநன்மையின்பாத்திரமோர்புறஞ்
சிலுவையினடையாளமோர்புறத்
தேவன்பாட்டைத்தியானிக்கத்தாலியைச்
சிறந்துகட்டடி ஞானப்பெண்ணே.

௱௪௫. மாசில்லான்சிலுவைநன்மைபாத்திர
மங்கிலியத்திலுருப்படுத்தி
இயேசுவின்றிருநாமத்தை முற்றிலு
மெழுதிக்கட்டடி ஞானப்பெண்ணே.

### ௨௧ சாதிகள் சகுன சாத்திரம்.

௱௪௬. பட்சிசாஸதிரம்பார்ப்பானேன் நீ
பல்விசாஸதிரம் பார்ப்பானேன்
அச்சமாய் நடுங்கத்திரியவுனக்
காண்டவனில்லையோ ஞானப்பெண்ணே.

௱௪௭. காக்காய்கத்துதலாந்தைகத்துதல்
காரியத்தைக்கெடுத்துப்போட்டாற்
போக்காய்மற்றக் குருவிகள்கத்துகிற்
புண்ணியமுண்டாமோ ஞானப்பெண்ணே.

௱௪௮. தன்வயிறு தனக்குப்பசிக்கையிற்
சகலபட்கியுங்கத்தாதோ
வுன்னிழவுக்குக் கத்துதென்றெண்ணி நீ
யுலைந்திருப்பானேன் ஞானப்பெண்ணே.

௱௪௯. பூனையுநாயுங் குறுக்கதிட்டாற் கன
பொல்லாப்புவருமென்றுசொன்னாய்
பூனையும்நாயுமுன்வீட்டிலிருப்பது
பொல்லாப்பல்லவோ ஞானப்பெண்ணே.

௱௫௰. பூனையுநாயும்பொல்லாப்பானாலந்தப்
பொல்லாதபூனையை நாயைவைத்து
ஏனிப்படி வளர்த்தாயுன்பயனத்துக்
கிடர்செய்யுமல்லோ ஞானப்பெண்ணே.

௱௫௧. நரிகுறுக்கேபோனாக்காற் கன
நன்மைகளுண்டாமென்றுசொன்னாய்
தெரியவுன்னுட செய்தியதற்கெவர்
செப்பினாரடி ஞானப்பெண்ணே.

௱௫௨. வீட்டிலிருக்கின்ற நாயும்பூனைய
மெத்தவுனக்குப்பொல்லாப்புச்செய்தாற்
காட்டிலிருக்கின்றநரியுங்காடையும்
கனங்கள்செய்யுமோ ஞானப்பெண்ணே.

௱௫௩. தன்னைப்பிடிப்பதுந் தன்னையடிப்பதுஞ்
சற்றறியாதவுயிர்க்களது
உன்னைப்பிடிக்கின்றநன்மையுந்துன்மையு
மோதவருமோசொல் ஞானப்பெண்ணே.

௱௫௪. ஒற்றைப்பார்ப்பான் வந்தாக்காலது
உத்தமமான சகுனமல்லக்
கத்தவங்கத்தியதானாற் காரியங்
கைகூடுமென்றாய் ஞானப்பெண்ணே,

௱௫௫. வண்ணானின் கழுதையதினுமுனை
மயக்குச்சாஸ்திரம் போதிவித்த
எண்ணுதின்குரு துற்சகுனத்துக்கென்
றிருந்ததென்னடி ஞானப்பெண்ணே.

௰௫௬. வண்ணானின்கழுதைபெரிதோ வுன் தன்
வள்ளுவப் பார்ப்பான்றான்பெரிதோ
எண்ணுதிப்படியுன்குருவைத்தா
னிகழ்ந்ததேதடி ஞானப்பெண்ணே.

௱௫௭. அம்பட்டன்வந்தாலுந் துற்சகுனம்
பார்ப்பானும்வந்தாலுந்துற்சகுனம்
அம்பட்டனையும் பார்ப்பானையுஞ்சரி
யாக்கலாமோடி ஞானப்பெண்ணே.

௱௫௮. அம்பட்டன் துற்சகுனமானாலந்த
அம்பட்டன்வந்துன்கலியாணந்
தம்பட்டம்போட்டடித்துக்கொண்டதின்
சத்தமேதடி ஞானப்பெண்ணே.

௱௫௯. துற்சகுனந்தருமம்பட்டன்றன்னை
சூழவுன்வாழ்வுக்கு முன்னேவைத்து
நற்சகுனந்தரு ஞானப்பறையனை
நாடவொட்டாததேன் ஞானப்பெண்ணே.

௱௬௰. பார்ப்பானைக்கழுதையாக்கியது
பத்தாமலம்பட்டனுமாக்கித்
கோப்பாயிப்படிக் குருவைத்தூஷித்த
கொடுமையென்னடி ஞானப்பெண்ணே.

௱௬௧. வாய்ச்சொல்வினால் நன்மையுந்துன்மையும்
வருவதுண்டென்று நம்புவதும்
பேய்த்தனமாகத் தும்மலைப்பார்ப்பதும்
பேதமையல்லோ ஞானப்பெண்ணே.

௱௬௨. தும்மினவனுனைக்கொல்வானோ அவன்
தும்மல்வந்துனைக் கொன்றிடுமோ
தும்மினவனுந் தும்மலுங்கொல்லாதுன்
சூதுகொல்லுங்காண் ஞானப்பெண்ணே.

## ௨௨. இன்னூற்சொன்னேன்றும்மினதற்குச் சாதிகள் கனன்றது.

௱௬௩. முன்னொருநாளந்தச் சாதிகள்வீட்டினில்
முகூர்த்தத்தன்றுபொடிபோட
அன்னசமயத்திற்றும்மினபோதெனை
யதிர்ந்துபார்த்தார்கள் ஞானப்பெண்ணே.

௱௬௪. தற்செயலாகிய தும்மலல்லவுங்கள்
சாஸ்திரக்காரர் தும்மலல்ல
நிச்செயமாகப்பொடித்தும்மலென்றும்
நெறித்துப்பார்த்தார்கள் ஞானப்பெண்ணே.

௱௬௫. பின்னையுநான்பயங்கொண்டிருக்கையிற்
பேசாதையுங்காணுமென்றமத்தி
யின்னொருவேளைபொடிப்போடப்போகாதோ
வென்றொருவன்சொன்னான் ஞானப்பெண்ணே

௱௬௬. தும்மலுக்கும்பல்விக்காதனுக்கும்
சொல்லுக்குமற்றுள்ளசீவனுக்கும்
விம்மிவிம்மிப்பயந்திருந்தாலும்
வினைவிட்டுப்போகுமோ ஞானப்பெண்ணே.

## ௨௩. சாதிகள் கலியாணச் சடங்கு.

௱௬௭. மங்கிலியப்பெண்களல்லாமலுந்தன்
வாழ்வுக்குத்தாலியறுத்தவளாற்
சங்கடமுண்டாமென்றுநீதள்ளின
சற்பனையேதடி ஞானப்பெண்ணே.

௱௬௮. மங்கிலியட்பெண்களேமுழுத்தக்கால்
வைத்துச்சீலையுடுத்திவிட்டு
மங்கிலியப்பெண்கள் மங்கிலியங்கட்டில்
மங்களமுண்டாமோ ஞானப்பெண்ணே.

௰௬௯ தாலியறுத்ததாய்தமக்கையர்
தானிருந்தாலுமகற்றிவிட்டுத்
தாலியறுக்காப்பெண்களைப்பார்த்து நீ
தான்தேடுகிறதேன் ஞானப்பெண்ணே.

௱௭௰. தாலியறுத்தவள்செய்தாக்காலவள்
தன்னைப்போலேயிவளுமானால்த்
தாலியறுதவள்செய்தாக்காலிவள்
தாலியறுக்காளோ ஞானப்பெண்ணே.

௱௭௧. மங்களமானவுன்வாழ்வுக்குத்தாயல்லோ
வந்தெல்லாஞ்செய்யவளமாகும்
அங்கவள்தாலியறுத்ததினாலவ
ளாகாதென்பதேன் ஞானப்பெண்ணே.

௱௭௨. தாலியறுத்தவளைத்தள்ளிவிட்டுநீ
சாஸ்திரந்தப்பாமற்றாலிகட்டிக்
கோலமாகமணஞ்செய்துகொண்டவள்
கூடவறுப்பானேன் ஞானப்பெண்ணே.

௱௭௩. அம்மிமிதித்துஅருந்ததிகண்டா
லற்புதமாமென்று சொன்னாயே
அம்மிமிதித்து அருந்ததிகண்டாப்போற்
செம்மையாய்ப்போவியோ ஞானப்பெண்ணே.

௱௭௪. அம்மிமிதித்து அருந்ததிகண்டா
லங்கவள்கற்புடையாளானால்
அம்மியிற்றானேமசாலையரைத்து
மவுசாரியாவதேன் ஞானப்பெண்ணே.

௱௭௫. வருந்தியநன்மைக்குச்சேர்ந்துங்குணப்பட
மாட்டாததுற்குணமாடதுக
ளருந்ததிகண்டதினாலேகற்பவர்க்
காமோசொல்லடி ஞானப்பெண்ணே.

௱௭௬. பூதக்கலங்கள்பரிமாறிப்பெரும்
போசனம்வைத்துப்படைக்கலுற்றாய்
வேதக்காறியுனக்கேதடிபேயென்ற
பூதக்கலஞ்சொல்லு ஞானப்பெண்ணே

௱௪௭. மாப்பிள்ளை பூதமோ பெண்ணது பூதமோ
வந்தபெருந் துக்களிற் பூதமுண்டோ
பூப்பட்ட ஆர்தனைப் பூதமென்றெண்ணி நீ
பூதக்கலம்வைத்தாய் ஞானப்பெண்ணே.

## THE OBSERVER—No. 8.

### *Native Medicine.*

Several months ago as I was walking out, I came to the side of Salt river where were several men engaged with their hoes in digging a pit. I asked them why they were digging a pit in that place. One of them answered, "We are digging for horse's teeth; our father has been a long time sick; and has taken much medicine without any benefit. He has now called a new Doctor who is to prepare a medicine that will cure him. One of the ingredients of which the medicine is to be compounded is horse's teeth, and we are here seeking for them. In this place we are told a horse was lately buried."

I stopped awhile by the place, from motives of curiosity, to see with what nerves these men, whom I knew to be of good caste, would tumble over the rotten carcass of a horse, to find his teeth. I had not long to wait, for soon a noisome stench poured forth from the pit that caused them all to turn away to breath a purer air. Seeing me laughing at their difficulties, one remarked "We would do this only for our father." I asked, "Will it not spoil your caste to handle a dead carcass?" He replied: "What is caste to the son whose father is sick?" I was pleased with this expression of filial regard, and very glad to see that caste might in cases of this necessity be dispensed with. I inquired of them what other ingredients they were to procure for compounding medicine. One of them took an ola from his cloth and read the list. It is too long to be all given here; but there were *horse's teeth, deer's horn, caster oil, jackal's teeth, butter-milk, lime juice, rhinoceros' horn, cloves, salt petre, soldering, nut-gall, iron, brimstone, ghee, honey, pepper, calomel, loadstone, hemp, asafetida*, with flowers and seeds and juices of different kinds, amounting together to 74 different ingredients. These were to be compounded together and taken twice a day for 40 days. This is doctoring indeed, thought I. He might as well prescribe a little of every thing in creation, and then he would be sure to get some of the best and most effective ingredients. As I walked away I could not help pitying this ignorant people, who in medicine, as well as in religion, are made the dupes of every designing imposter. What can be more fanciful, what more unreasonable, than a compound of such stuffs. And yet I dare say, the more numerous, and the more curious, and the more incongruous the remedies prescribed, the more confidence they would place in its efficacy. Not long since, I again met one of these individuals and asked him if the medicine had been prepared. He said it had. I inquired if his father's health was improved by it. He answered "Not yet."

## கண்காணி—அ௱. இலக்கம்.

இற்றைக்குக் கொஞ்சமாதத்திற்கு முன்னே நான் உலாத்தப்போய் வழுக்கையாற்றண்டையில் நின்றுவருகையிற் சிறிது பேர் மண்வெட்டியாலே கிடங்கொன்று கிண்டிக்கொண்டு நின்றதைக்கண்டு—இங்கே யேன்கிடங்கொன்று தோண்டுகிறீர்களெனக் கேட்டதற்கு—அவர்களிலொருவன்—ஐயா, அப்பு அல்லவோ வெகுகாலமாய்த் துன்பமாயிருக்கிறார். என்ன மருந்துகொடுத்தும் ஒன்றுக்கும் மாறுகுதில்லை. இப்பவும் ஒருபரிகாரிவந்து தானொரு மருந்துசெய்து மாற்றுகிறேனென்கிறார். அதிற்குதிரைப்பல்லுமொருமருந்து. இங்கே சிறிதுநாளைக்குமுன்னே ஒரு குதிரைதாட்டிருக்குதாம்—அதின் பல்லை எடுக்கத்தான் கிளறுகிறோமென்றான்.

தாட்ட குதிரையை அவர்கள்கிளறுவதெனக்கொரு வேடிக்கைபோலிருந்தபடியால், இவர்கள் தாங்கள் பெரிய சாதிமான்களாயிருந்தும் அழுகியொழுகி யுருவழிந்திருக்கிற குதிரையைத் தீண்டுவதெவ்விதமென்று அறிகிறதற்குக் கொஞ்சநேரம் நான் அவ்விடம் நின்று பார்த்தபொழுது, குதிரையழுகி வீசின நாற்றம் என்னாற்பொறுக்கக் கூடாமற்போயிற்று. குதிரை கிளறினவர்களும் நாற்றம் பொறுக்கக்கூடாமையாற் காற்றுக்கெதிர்நோக்கு மற்றவளத்திலே நின்றார்கள். அவர்கள் குதிரைப்பல்லெடுக்கப் பஞ்சிப்படுவதை நான் கண்டு சிரித்தபொழுது, ஒருவனென்னைப்பார்த்து—ஏன் ஐயா சிரிக்கிறீர். இதெல்லாம் அப்புவுக்காகச்செய்கிறோமென்றான். அப்போ நான்-செத்த பிணத்தைத் தீண்டுவது குலத்துக்ஈனமல்லவோவென்று கேட்டதற்கு, அதற்கவன்—ஏன் ஐயா—ஒரு பிதாத் துன்பமாயிருக்கும்பொழுது, பிள்ளை சாதியைப்பார்த்து என்னசெய்கிறது—என்றான். இவன் சொன்ன சொலவில் இவன் தன்பிதாவிற் சிநேகமாயிருக்கிறதை நான்கண்டு மிகவுஞ் சந்தோஷங்கொண்டதுமன்றிக் காரியமானகாரியத்திற் சாதியைப்பார்த்தாற் காரியம்வாய்க்குமா என்னுங் குணத்தையும் கண்டது எனக்கு மனமகிழ்ச்சியாயிருந்தது. குதிரைப்பல்லோடேவேறென்னென்ன மருந்து சேர்க்கிறதென்று நான் கேட்க—ஒருவன் மடியிலிருந்து ஒருபட்டோலையை யெடுத்து, ஐயா கேளும், குதிரைப்பல்லு, மான்கொம்பு, ஆமணக்கெண்ணெய், நரிப்பல்லு, மோர், எலுமிச்சம்புளி, காண்டாமிருகத்தின் கொம்பு, கராம்பு, வெடியுப்பு, நவசாரம், கடுக்காய், அரைபொடி, கந்தகம், நெய், தேன், மிளகு, இரசபற்பம், ஊசிக்காந்தம், கஞ்சா, பெருங்காயம், இன்னும்பற்பல வகையான புட்பங்களுங் கொட்டைகளுஞ் சாறுகளும்ம ஐயா, எல்லாவற்றையும் வாசித்துக்கொள்ளக்கூடாது. ஆக எழுபத்துநாலுமருந்து. இம்மருந்துகளை ஒருமிக்கச்சேர்த்து ஒருநாளுக்கு இருமுறையாக, சய நாளவுந் துன்பக்காரனுக்குக் கொடுக்கவேண்டியதென்று பரிகாரியார் தந்தபட்டோலையிதுதானென்றான். இப்படியெல்லாம் இவன் சொல்லக்கேட்டு—பளாபளா நன்றாயிருந்தது.—இதெல்லோ பரிகாரமென்று நினைத்தேன். பின்னை, இந்தப்பரிகாரியார் ஊரிலேயுள்ள தாபர சங்கமங்களனைத்திலுங் கொஞ்சங்கொஞ்சமெடுத்துச் சேர்த்துக்கொள்ளுங்கள் அப்போ காரியம் வாய்க்குமெனறெண்ணியிருக்கவுங் கூடும்.

அவர்கள் குதிரைப்பல்லைக் கிளறினவிடத்தில் நான் வெகுநேரநில்லாமல் வீட்டுக்குச் செல்லுகையில், பேதமையுள்ள இந்த ஏதைகளைப்பற்றிப் பரதபித்தேன். இவர்களோ மார்க்கத்தைப்போல மருந்து மந்திரங்களிலும் தாங்கள் கைகண்ட வைத்தியரெனத்திரிகிற பைத்தியவான்களையொத்த பேடிசகாரருடைய அகடவிகடங்களில் அகப்பட்டுச் சுமடராய்ப்போகிறார்கள். ஆனாலும் ஒருவியாதிக்கொருபரிகாரி எவ்வளவு அதிகதொகையான மருந்தைச்செய்யும்படிபட்டோலைபோட்டுக்கொடுக்கிறாரோ, அவ்வளவு மருந்தும் நூதனமுள்ளதாயும் தேடிக்கொள்வது மகாபிரயாசமுமாயிருந்துவிட்டுதேயானால், பின்னை அம்மருந்துசெய்வதினாலே வியாதிக்கு நலம்வருமென்றெண்ணிக் கூடியளவுதெண்டித்து உயிர்போகினும் விடாமல அப்பட்டோலையின் மருந்து வகைகளையே தேடுகிறார்களென்பதற்குச் சற்றெனினுஞ் சந்தேகமில்லை.

கொஞ்சநாளையிற் பிறகு அன்றைக்கு அந்தக்குதிரையைக் கிளறிக்கொண்டு நின்றவர்களிலொருவனை நான் கண்டு—ஏது தம்பி— நீ சொன்ன மருந்தெல்லாம் உன் தகப்பனுக்குச் செய்துபோட்டதோவென்றும் ஏதும் அத்தாற் சுகங் கண்டதோவெனறதற்கு—இன்னமுஞ் சுகம்வரவில்லையே ஐயாவென்றான்.

மகா கனம்பொருந்திய முகாமைத் துரையவர்களுக்கு வந்தனம்.

ஐயாவே,

தங்கள் தாரகை; ௰௧. சஞ். ௱௰. பக்கத்தில் திண்டிக்கல் நாரணசாமிநாயுடு என்பவருடைய கணக்குவினாவுக்கு யாழ்ப்பாணம் சுண்டிக்குழிமுத்து என்பவர் ௰௩ சஞ். ௱௩௰௧ பக்கத்திலெழுதியிருக்கிற விடையில யாவருங் கவனிக்கக் கூடிய குற்றங்களாவன—

௧. அவர் இங்கிலீஸ் பாஷையைக் கற்றிருப்பதினால் அப் பாஷையைக் கற்றிருப்பவர்கள் மாத்திரம் எளிதில உணரும்படி அவ் விடையை இங்கலீசில் எழுதியிருக்கிறார். அப்பாஷையை அறியாதநாரணசாமிநாயுடுவைப்போலொத்தவர்களுக்கது எப்படிவிலங்கும்?

௨. நாரணசாமிநாயுடு என்பவர் இங்கலீசிலே ஓரட்சரமாவதுவரையாமல் அத்தைத் தமிழிலே கேட்டிருப்பதால் அதற்கு நேராகத் தமிழிலேயே விடைகொடாமல் இங்கிலீசில் விடை கொடுத்தார்.

௩. தமிழர் யாவரும் அவ்விடையை நன்றாய் அறியத் தமிழ்க் கணக்கின்படி அல்லது கணக்குச் சாத்திரத்தின் பொது விதிகளைக்கொண்டு செய்யாமல் ஏரோப்பையரின் சாஸ்திரவொழுங்காக *ஆல்சிபிராவைக்கொண்டு செய்தார்.

௪. தமிழிற் கேட்கப்படுகிற கேள்விகள் யாவற்றிற்கும் தமிழ் எண்வாய்ப்பாட்டின்படி சரிவரச் சேடமில்லாமல் இயந்து விடை எழுதுவதற்குப் பதிலாக ஏறக்குறைய "உவ. நாழிகை" யென்று துணிவுற எழுதியிருக்கிறார். ஆகையால இந்த நான்கு விசேஷித்த குற்றங்களுக்கும் வகை சொல்வாராக.

இப்படிககு திருமங்கலத்திலிருக்கிற அமேரிக்கன்
மிசியோன், உம். பள்ளிக்கூட உவாத்தியாகிய
சொ. இரெங்கசாமி நாயக்கர்.

* Algebra.

## ஓர் கணக்கு வினா.

### Arithmetical Query.

ஓர் இராசாவுக்கு ஓர் இடையன் நாடோறும், ௨௪. படி பால் கொண்டுவந்து கொடுப்பான். ஒரு படி பாலுக்கு விலை ஒரு பணம். அந்த இராசாவின் அரண்மனைக்கு, ௨௪. வாசல்களுண்டு. அவைகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு காவற்காரன் இருப்பான். அந்த இடையன் ஒரு நாள் பால்கொண்டுவந்தவிடத்தில் முதல்வாசற்காரன் கொண்டுபோன பாலில் ஒரு படி பால் தனக்குத் தரச் சொல்லி வலுவந்தம்பண்ணி வாங்கிக்கொண்டு அதற்குச் சரியளவான தண்ணீரைக் குறைவுக்காக விட்டுக் கலந்து கொடுக்க அவ்விடையன் சம்மதித்து வாங்கிக்கொண்டு இரண்டாம் வாசலிற் போக அவ்வாசற்காவற்காரன் தண்ணீர் கலந்த அப்பாலில் தானும் ஒரு படியெடுத்துக்கொண்டு அதற்குச் சரியளவான தண்ணீர் விட்டுக்கொடுக்க இப்படியே, ௨௪. வாசற்காவற்காரருஞ் செய்தார்கள். மீதியான பாலை அளவிற் கொஞ்சமாவது குறையாமல் இராசாவினிடமாகக்கொண்டுபோய் வைக்க இராசா பாலைப் பார்த்து அவனிலே அதிக கோபங்கொண்டு அவ்விடையனிடத்தில், ௨௪. பணம் அபராதம் வாங்கிப்போட்டார். அப்பொழுது இடையன் அதிக துக்கமடைந்து அந்தக் காவற்காரரிடத்துக்கு வந்து நீங்கள் பாலெடுத்துக்கொள்ள நானு தெண்டமிறுக்கிறது? ஆகையால் உங்களை இராசாவுக்குச் சொல்வேனென அவர்கள் அதிகம் பயந்து எல்லாருங் கூடி அவனுக்கு அந்த, ௨௪. பணத்தையுங் கொடுக்கும்படி சம்மதித்து அவனவன் எடுத்த பாலின் ருசைக்குத்தக்கதாகப் பணங் கொடுத்தார்கள். ஆகையால் ஒவ்வொருவன் கொடுத்த பணமெவ்வளவு?

இப்படிக்கு
சொ. இரெங்கசாமிநாயக்கர்.

---

MR. EDITOR,

The Apostle Peter you know was the successor of Jesus Christ. The "Rock" on which the church was built? Against which the gates of hell should not prevail. He had the "keys of the kingdom of heaven"? Whatsoever he bound on earth is bound in heaven, and whatsoever he loosed on earth is loosed in heaven? Now supposing this all true, and supposing all this was confined exclusively to Peter, what then? Why I will tell you Mr. Editor. Peter was highly honored, and either fulfilled his commission as the vicegerent of Jesus Christ or he did not. This is very plain. Now if he betrayed his trust and did not fulfil his commission to the very spirit and letter of our Lord's command, then he is to be blamed, and no man has any right to follow his example; for the command is, "be ye perfect"—and the condition is, "ye are my disciples if ye do whatsoever I command you." Besides, if he neglected his duty, who will dare say wherein he was deficient if the Bible does not? No one I presume will choose this alternative. Very well. We must therefore conclude that the apostle Peter *did* and *taught* all that is said or even implied in our Saviour's instructions to him. Now then as to matters of fact; What did Peter *do* and *teach?* For this must be the exegesis of his commission. His *sermons* are mostly Old Testament history with New Testament applications. His *Epistles* are plain exhortations "to them who have obtained like precious faith"—in "both which he stirs up the pure minds of his beloved by way of remembrance." This is all, as to the Bible history, of what the apostle Peter taught. As to the notices made of him in connexion with other disciples or apostles it is plain that sometimes he "was to be blamed"—and at other times he was not first in counsel—even as it seemed good to the Holy Ghost. But I will not enlarge. I only appeal to those who would make Peter an archbishop or a Pope, whether the Apostle ever speaks of himself as chief or head? Did the other apostles speak thus of him? Did he speak of prayers to Mary—or to any other of the saints?—or did he name the places of worship—St. Peter's or St. Paul's church or chapel? Did he speak of a purgatory? or that the bible must not be given to the common people? Did he impose penance, or fines, or in any way "lord it over God heritage?" Now these (and many other such) questions are plain common sense inquiries, which a little child can understand, and all tend to shew what was, and what was not said, or implied in our Saviour's commendation of—and command to his disciple Peter—who while exhorting "elders to feed the flock of God—not for filthy lucre but of a ready mind—"as ensamples *to*" not lords over the flock," called himself also an "elder." I ask any one to read the Apostles' history as it is recorded in the Bible, and to say, what denomination of Christians most closely follow the example and doctrines of the apostle Peter? I ask also a more general question: viz. What is that "salt of the earth" and that "light of the world, which have enriched every land where they have had the ascendancy?—and what are those *opposites* which have been a blight and a curse to those lands where they have had the ascendancy? I appeal to the history of nations in Europe, in Asia, and in North and South America for the past 50 or 100 years. "The wise shall understand." But it should *ever* be kept in mind that "Every man, &c. (see Rev. xxii. 18–19.)

Yours truly,
A LOVER OF TRUTH.

---

## பிரசித்தபத்திரம்.

இத்தைக்கொண்டு சகலர்க்கும் அறிவிக்கிறதென்னவானல், வண்ணார்பண்ணை இறைக்கட்டுக்குச்சேர்ந்தமாதாக்க முதலியார் பிலிப்பு வயித்தியநாதர்பேரில்த் தோம்புபூண்ட முல்லைக்கட்டையடியும் மறுபிறிவும் பரப்பு நிலையிலாச்சம். ௧௯வ. அதற்குச்சேர்ந்த வீடுகள், பனை, கிணறு, செய்பயிர், மற்றும் புரோசனங்கள்—இதற்கெல்லை கிழக்கு வயித்திசுபரனும் மறுபேரும், வடக்கு தெய்வானையும் மறுபேரும், மேற்கு ஒழுங்கையும் மறுபேரும், தெற்கு சிவசிதம்பரஞ் செட்டியார். இவைகளை இதனடுத்துவரும் புரட்டாசிமாதம் ௧௯ந் தேதி. வியாழக்கிழமை இரண்டுமணியளவில் அந்தக்காணிக்குள்ளாகத்தானே ஏலங்கூறி விற்கப்படும்.

மேற்படி சுண்ணாகம் இறை அருளம்பலமுதலியார்பேரில்த் தோம்புபூண்ட தாவிளை விளாப்புவயல, பரப்பு நெல இலாச்சம். ௪௨¾. கிழக்கெல்லை இலட்சுமியும் மறுபேரும், வடக்கு ஐயம்பிள்ளையும் மறுபேரும், மேற்கு வயிரவனாதரும் மறுபேரும, தெற்கு ஒழுங்கை—இந்தக்காணியையும இதனடுத்துவரும் புரட்டாசிமாதம், ௨௪ந் தி. செவ்வாய்க்கிழமை பின்னேரம் இரண்டு மணிபோலே விற்கப்படும்.

☞ விற்பனவின் கொந்திசு இன்னதென்றந்த இடத்திலேதானே பிரசித்தமாக அறிவிக்கப்படும்.

தெல்லிப்பழை வேளாளன் சுண்ணாகங் குடி காலஞ்சென்றுபோன வயித்தியநாதமுதலியார் கைமபெண் யாழைப்பழித்தாருடைய ஆஸ்திக்கு மல்லாகங்குடி வைத்தியநாதமுதலியார் முத்துக்குமாரர் யாழ்ப்பாணம் டிஸ்திரிக்ம்காட்டில் உரிமைத்தத்துவம் பெற்றிருக்கிறபடியால், குறித்த யாழைப்பழித்தாருடைய ஆஸ்தியைப்பற்றிக் கொடுக்கல்வாங்கலுள்ள சகலரும், அத்தைச் சேர்ந்த ஆதனபாதனத்தை வைத்திருக்குமனைவரும் இதனடுத்த அற்பசி ௴. ௨௨ந் தேதியிலன்று அல்லது அதற்குள்ளாகச் சொல்லப்பட்ட உரிமைத்தத்துவகாரன் வைத்தியநாதமுதலியார் முத்துக்குமாரரிடம் வந்து தங்கள் தங்கள் கணக்குவழக்குகளைத் தீர்த்துக்கொள்ளவும்.

---

## SALE OF LANDED PROPERTY.

NOTICE is hereby given, that on Thursday the 19th of September next at 2 o'clock in the afternoon, will be sold at the Premises, the Land situated at Wannarponnay, called Mullacattaady and other Parcels, with Houses, Well, Palmira trees and other Trees standing thereon, in extent 19¼ Lachams of Warago Culture, registered in the Thombo on the name of MARTHACA MOODELLIAR PHILIPOO WYTIYANADER and bounded on the East by the Land of WYTISOOPARAN and others, and on the North by the Land of TEVANY and others, on the West by the Lane and others, and on the South by the Land of SEVASEDAMPARAM CHETTIAR.

And on Tuesday the 24th day of September next at 2 o'clock in the afternoon will be sold at the Premises the Land situated at the Village of Choonagam, called Tavalaywelappoovayal in Extent 42¾ Lachams of Paddy Culture, registered in the Thombo on the Name of AROOLAMPALA MOODELLIAR and bounded on the East by the Land of ELATCHEMY and others, on the North by the Land of AYAMPILLAY and others, on the West by WYRAVANARDAR and others, and on the South by the Lane.

---

WHEREAS Letters of Administration of the Estate of YARLAPALITAR, widow of WYTIYANARDER MOODERLIAR, Vellaly of Tillipally, late of Choonagam deceased, having been granted by the District Court of Jaffna to the undersigned WYTIYANARDER Moodelliar MOOTOOCOOMARAR,

Notice is hereby given to all persons having any Claims on, or being indebted to, or holding Property belonging to the same to prefer their Claims, pay the Debts and return such Property to the undersigned on or before the 22d of October next.

WYTIYANARDER MOODELLIAR MOOTOOCOOMARAR,
*Administrator.*

*Mallagam August* 7, 1844.

Printed and Published at the American Mission Press, Jaffna, by Eastman Strong Minor.